விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 22 திங்கட்கிழமை (07.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

## இரு நாட்களுக்குள் யாழில் ரி.ஐ.டியினரால் 6 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் ரி.ஐ.டி யாழில் இரு நாட்களுக்குள் 6 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதன்படி பயங்கரவாத தடுப்பு பிரிவினர் என தம்மை அடையாளப்படுத்திய நபர்களே மேற்குறிப்பிட்ட கைதுகளை மேற்கொண்டுள்ளனர் என உறுப்பினர்கள் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

அந்த வகையில் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் சகோதரர்களான இந்திரகுமார் கபில் உசாந்தன், இந்திரகுமார் நிரோசன் மற்றும் செல்வராசா விதுரன் ஆகியோர் நேற்றைய தினம் காலை மருதனார்மடம் திருப்பதி வெங்கடாச்சபதி கோவிலுக்கு அண்மையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 3

24ஆம் பக்கம் பார்க்க....

## தேசிய அரசை கவிழ்ப்பதற்கு புத்தர் சிலை மூலம் முயற்சி

### கிழக்கு முதலமைச்சர் சந்தேகம்

(அம்பாறை)

அம்பாறை – இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவு மாயக்கல்லி மலையில் சிலை வைக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாக கூறப்படும் அமைச்சர் அரசாங்கத்துக்கு எதிரான சக்திகளின் ஒப்

23ஆம் பக்கம் பார்க்க....



## ஜனாதிபதி நேற்று இந்தியா பயணம்

(கொழும்பு)

புகையிலைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஏழாவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நண்பகல் யுஎல் 195 விமானத்தினூடாக இந்தியா பயணமானார்.

டில்லியை சென்றடையும் அவர், இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேச்சு

24ஆம் பக்கம் பார்க்க....

# மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ், நிதி அதிகாரங்கள் பகிர்வு

## அரசியல் உபகுழு யோசனை முன்வைப்பு

(கொழும்பு)

காணி, பொலிஸ் மற்றும் நிதி தொடர்பான முழு அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கவும் மாகாண சபையை கலைக்க ஜனாதிபதிக்கு தற்போதுள்ள அதிகாரத்தை மட்டுப்படுத்தவும் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கான யோசனைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட 6 உப குழுக்களில் ஒரு குழுவே இந்த யோசனையை முன்வைத்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## விக்கியின் அதிருப்தி த.தே.கூட்டமைப்பை பாதிக்காது!



(புதுடில்லி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் அதிருப்தி தெரிவிப்பது எந்த விதத்திலும் கூட்டமைப்பை பாதிக்காது என்றும், அரசியல் கட்சிக்குள் ஜனநாயகம் முழுமை பெறுவது நல்ல விடயம்தான் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார். மீனவர் பிரச்சினை தொடர்

04ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (சா/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
விஞ்ஞானம் - II



உள்ளே...

## மாணவர் படுகொலையின் பின்னரான நிலைமைகள்

## ஜனாதிபதி, பிரதமரை சந்தித்து வலியுறுத்த

## இளைஞர்கள் சீரழிவதற்கு பெற்றோர்களே பொறுப்பு!

# மாகாண சபைகளுக்கு

# காணி, பொலிஸ், நிதி அதிகாரங்கள் பகிர்வு

## அரசியல் உபகுழு யோசனை முன்வைப்பு

(கொழும்பு)

காணி, பொலிஸ் மற்றும் நிதி தொடர்பான முழு அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கவும் மாகாண சபையை கலைக்க ஜனாதிபதிக்கு தற்போதுள்ள அதிகாரத்தை மட்டுப்படுத்தவும் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியலமைப்புச் சட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கான யோசனைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்ட 6 உப குழுக்களில் ஒரு குழுவே இந்த யோசனையை முன்வைத்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியா பயணம்

(கொழும்பு)

புகையிலைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஏழாவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நண்பகல் யுஎல் 195 விமானத்தினூடாக இந்தியா பயணமானார்.

டில்லியை சென்றடையும் அவர், இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியைச் சந்தித்துப் பேச்சு

24ஆம் பக்கம் பார்க்க....




## த.தே.கூட்டமைப்பை பாதிக்காது!



(புதுடில்லி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரன் அதிருப்தி தெரிவிப்பது எந்த விதத்திலும் கூட்டமைப்பை பாதிக்காது என்றும், அரசியல் கட்சிக்குள் ஜனநாயகம் முழுமை பெறுவது நல்ல விடயம்தான் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கருத்துத் தெரிவித்துள்ளார். மீனவர் பிரச்சினை தொடர்

04ஆம் பக்கம் பார்க்க....

## மாணவர் படுகொலையின் பின்னரான நிலைமைகள்

# ஜனாதிபதி, பிரதமரை சந்தித்து வலியுறுத்த ஏழு தமிழ்க் கட்சிகள் ஒன்றாக கூடி முடிவு



23ஆம் பக்கம் பார்க்க....


## இளைஞர்கள் சீரழிவதற்கு பெற்றோர்களே பொறுப்பு!

### கவனக் குறைவும் காரணம்-விக்கி

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தை பண்பட்ட ஒரு சமூகமாக மாற்றுவதற்கு என்னென்ன வழிமுறைகளை பின்பற்ற முடியும் என்பது பற்றி ஆரய்ந்து நாம் யாவரும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை கிறிஸ்து நற்தூது பணியகம் ஏற்பாடு செய்த முத்தமிழ் விழா நிகழ்வு குடத்தனையில் அமைந்துள்ள கிறிஸ்து நற்தூது பணியக



மண்டபத்தில்நேற்றைய தினம் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு

23ஆம் பக்கம் பார்க்க....

## வீதிக்கு இறங்கி போராட வேண்டும்



23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.குற்றச் செயல்களுடன் இராணுவத்துக்குள்ள தொடர்பு

### விசாரணையை வலியுறுத்துகிறார் சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் குற்றச் செயல்களை மேற்கொள்ளும் குழுவினருக்கும் இராணுவத்துக்கும் இடையே தொடர்புகள் உள்ளனவா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக ஊடக


23ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளி கைது குறித்து சம்பந்தனிடம் மனைவி முறைப்பாடு!

(மல்லாவி)

முன்னாள் போராளியான தனது கணவன் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட நிலையில், மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளமை தமது குடும்பத்தை வெகுவாக பாதித்துள்ளதாக அவரது மனைவி கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த எதிர்க்

23ஆம் பக்கம் பார்க்க....



**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# பிரித்தானிய தொண்டு நிறுவனமான PATH TO THE FUTURE (எதிர்காலத்திற்கான பாதை) அமைப்பினால்

## முல்லை மாவட்டத்தில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக முல்லை அமரா பெண் தலைமை தாங்கும் ஒன்றியத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பிள்ளைகளுக்கு 32 துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு

கடந்தகால கொடிய யுத்தத்தினால் தங்களது கணவன்மாரை இழந்து வாழ்வாதாரத்திற்காக சிரமப்பட்டுக் கொண்டிக்கும் தாங்கள் தமது பிள்ளைகளின் கல்வியை தொடர்வதற்கு துவிச் சக்கரவண்டிகள் இல்லாது தாங்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் தங்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வாங்குவதற்கு பொருளாதார கஷ்டம் உள்ளதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரித்தானிய தொண்டு நிறுவனம் PATH TO THE FUTURE 32 துவிச் சக்கரவண்டிகளை வழங்கி வைத்துள்ளதுடன் எதிர்காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கல்வி கற்கும் மாணவர்களுக்கு உள்ள இடர்களை களைய முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது பணியை முன்னெடுக்கவுள்ளது.

(சி-6335)
































தவராஜா நவீந்திரன்
கல்வி, சமூக மேம்பாட்டுப் பொறுப்பாளர்
வட்டு. இந்து வாலிபர் சங்கம்

# மக்களின் சொத்துக்களைச் சூறையாடினால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்

## யாழ்.அரச அதிபர் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

**வலி.வடக்கில் இராணுவத்திடம் இருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளில் எஞ்சியுள்ள பொதுமக்களின் சொத்துக்களை சூறையாடிச்செல்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் எச்சரித்துள்ளார்.**

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து இராணுவத்தினரால் அண்மையில் விடுவிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை யாழ் மாவட்ட அரச அதிபர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் பார்வையிடுவதற்காக சென்றிருந்தனர்.

அங்குள்ள நிலைமை தொடர்பாக அவதானித்த பின் அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்.

வலி.வடக்கில் தற்போது விடுவிக்கப்பட்டுள்ள 454 ஏக்கர் பொதுமக்களின் காணிகளை கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதியால் எமக்கு அடையாளப்படுத்தி காண்பிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 31 ஆம் திகதி முகாம் மக்களுக்காக கட்டப்பட்ட 100 வீடுகளை கையளிப்பதற்காக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார்.

அப்போது 454 ஏக்கர் நிலப்பரப்பினையும் விடுவிப்பதாக உத்தியோகபூர்வமாக எமக்கு அறிவித்தல் வழங்கியிருந்தார்.

அந்த வகையில் தற்போது மக்கள் தமது நிலங்களை பார்வையிடுவதற்கு அடையாளப்படுத்துவதற்காகவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முதற்கட்டமாக பொது மக்கள் தமது வீடுகளை பயன்படுத்துவதற்காக வீதிகள், சிறுபாதைகளை திருத்தம் செய்ய வேண்டிய தேவை உள்ளது. எனவே மீள் குடியேற்ற அமைச்சின் உதவியுடன் குறித்த வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பமாகும்.

அதற்கு கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம மக்கள் வீதிகளை அடையாளப்படுத்திக் காண்பிப்பார்கள்.

மிக முக்கியமாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் குறித்த காணிகளுக்கு சொந்தமில்லாத பலர் வருகை தந்து வீடுகளில் எஞ்சியுள்ள தளபாடங்கள், பொருட்கள் மற்றும் மரங்களை சூறையாடி செல்வதாக பலர் எமக்குத் தகவல்களை வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளோம். அத்துடன் வாகனங்களில் ஏற்றிச்செல்லும் பொருட்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.


அவ்வாறு தொடர்ந்து பொருட்களை சூறையாடுபவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)





## தையிட்டி ஸ்ரீ கணேசா ஆரம்பப் பாடசாலையை ஜனவரி முதல் மீள இயக்குவதற்கு நடவடிக்கை





தையிட்டி ஸ்ரீகணேசா ஆரம்ப பாடசாலையை ஜனவரி மாதம் முதல் மீள இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் எஸ். சந்திரராஜா தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு பகுதியிலுள்ள 454 ஏக்கர் காணிகள் பொதுமக்களின் பாவனைக்காக அண்மையில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டிருந்தது. அப்பகுதியில் அமைந்துள்ள பாடசாலைகளை மீள இயக்கும்நோக்குடன் வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் அப்பகுதிக்கு சென்று பார்வையிட்டிருந்தனர்.

இது தொடர்பாக வலிகாமம் கல்வி வலய பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில், தையிட்டி சிவகுருநாதர் வித்தியாலயம், ஊறணி றோமன் கத்தோலிக்க பாடசாலை, தையிட்டி ஸ்ரீகணேசா ஆரம்ப பாடசாலை ஆகியவற்றுக்கு சென்று பார்வையிட்டிருந்தோம்.

அதில் தையிட்டிஸ்ரீகணேசா ஆரம்ப பாடசாலைக்கான கட்டடம் முழுமையாக அழிவடையாமல் இருப்பதால் கூரைகள் மற்றும் மலசல கூட வசதிகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 4மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்பு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பாடசாலை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்துடன் தையிட்டி சிவ குருநாதர் வித்தியாலயம் முற்றுமுழுதாக அழிவடைந்துள்ளதால் அதற்கான புதிய கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

ஊறணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானம் விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாடசாலை கட்டடங்கள் அமைந்துள்ள பகுதி விடுவிக்கப்படவில்லை. அவை விடுவிக்கப்படும் பட்சத்தில் புனரமைப்பு செய்யப்பட்டு மீள் இயக்கப்படும் என தெரிவித்தார். (இ-9)

## இலங்கை ஜி.எஸ்.பி.வரிச்சலுகையை பெறுவதற்கு ஜேர்மனி பங்களிக்கும்



இலங்கை ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை பெறுவதற்கு ஜேர்மனி தங்களது பங்களிப்பை தர எதிர்பார்த்துள்ளதாக ஜேர்மனின் துணை ஜனாதிபதி சிக்மர் கேப்ரியல் தெரிவித்துள்ளார்.

15 ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களாக இலங்கை சரியான பாதையில் தங்களது முன்னேற்றங்களை மேற்கொண்டு வருகின்றது. அதற்கு ஜேர்மன் தங்களது வாழ்த்துக்களை கூறிக் கொள்வதாக சிக்மர் கேப்ரியல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் கல்வித்துறை முன்னேற்றங்கள் மற்றும் நவீன அபிவிருத்தி தொடர்பாகவும் ஜேர்மனின் துணை உப ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஈழ அகதிகள் இருபது பேர் நாடு திரும்புவர்

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன்னெடுக்கும் சுயவிருப்பின் பேரில் நாடு திரும்புவோருக்கு வசதியளிக்கும் திட்டத்தின் கீழ் ஈழ அகதிகள் 20 பேர் எதிர்வரும் 15 ஆம் திகதி தாயகம் திரும்பவுள்ளனர்.

10 குடும்பங்களைச் சேர்ந்த குறித்த ஈழ அகதிகள் சென்னையில் இருந்து ஸ்ரீலங்கா எயார் லயன்ஸ் விமானம் மூலம் கொழும்பை வந்தடைவார்கள் என மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதிதெரிவித்தார். (இ-7)

## பத்திரிகை,பத்து இணையத்தளங்களை உருவாக்க பிரதமர் ரணில் நடவடிக்கை

### கெஹலிய எம்.பி.தகவல்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு பில்லியன் ரூபா செலவில் புதிய பத்திரிகையொன்றை ஆரம்பிக்க தேவையான அச்சகமொன்றை அமைத்துள்ளதாக முன்னாள் அமைச்சரும் மகிந்த சார்பு எம்.பி.யுமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இந்த நிதியை முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் முதலீடு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கண்டி புஷ்பதான பாலிகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிர்க் கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உலகிலுள்ள பிரபல இணையத்தள செயற்பாட்டாளர்கள் 10 பேரை அடுத்த மாதம் நாட்டுக்கு வரவழைத்து, 10 இணையத்தளங்களை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பயண ஏற்பாட்டுக்காக ஹெலிகொப்டர் ஒன்றை இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக கெஹலிய எம்.பி. தனதுரையில் தெரிவித்துள்ளார். (இ-7)

## பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க வேண்டும்-வாசு

கோப் அறிக்கையில் கண்டறியப்பட்ட முறிகள் மோசடி குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்றத்தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மாகொல பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸாரின் சுற்றிவளைப்பில் கசிப்பு உற்பத்தியிடம் நிர்மூலம்!

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய பிரிவிற்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் பொலிஸ் பகுதியில் உள்ள மன்னாகண்டல் எனும் இடத்தில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தியிடம் ஒன்று பொலிஸ் அணியினரால் சுற்றிவளைக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி உத்தரவுக்கமைய முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் கொஸ்தாபர்களான ரஹீஸ், கெனன், இந்திரத்ன ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே மேற்படி சட்ட விரோத கசிப்பு உற்பத்தியிடத்திலிருந்து 30 ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் , 4, 80 000 மில்லி லீற்றர் கசிப்பு கோடாவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது குறித்த கசிப்பு உற்பத்தியிடமும் பொலிஸாரால் நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்பட்டு சம்பவ இடத்தில் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந் நிலையில் , தடயப் பொருட் களுடன், கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலய தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-15)

## மரண அறிவித்தல்

### வைரமுத்து நல்லராசா



வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட வைரமுத்து நல்லராசா நேற்று (06.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - பெரியபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சின்னம்மா, தம்பிமுத்து, இராசமாணிக்கம், இராசரத்தினம், செல்வராசா, துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் விஜி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி), சுஜி (ஆசிரியை - யா/உடுப்பிட்டி அ.மி கல்லூரி), சஜி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திரகுமார், மணிமாறன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுரன், யதுர்ஷிகா சுஜோயிதன், சேயோன், விஷாலி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2016) திங்கட்கிழமை பி.ப 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-6338)

தகவல்:
சி. சந்திரகுமார் (மருமகன்)
த. மணிமாறன் (மருமகன்)

தவபதி
நெல்லியடி வடக்கு, வதிரி.

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 10.06.1975 இறப்பு 06.11.2016

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற உத்தியோகத்தர் க.இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவி

அமரர்

**விமலாதேவி இராசரத்தினம்**



அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள், பதிவாளர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்கள்.
மேல் நீதிமன்றம்,
குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
(6539)

# சிறுவனின் சடலம் அடையாளம் காண்பிப்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு கடல்நீரேரியில் நீராடியபோது உயிரிழந்த சிறுவன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற சூரசம்கார நிகழ்வினைப் பார்க்க வந்தபோது நீரேரியில் நீராடிய சிறுவன் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உயிரிழந்தார்.

பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியைப் பார்த்த பெற்றோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு சென்று தமது பிள்ளையான ஆனந்தகுமார் ஜெயபிரகாஸ் (வயது 14) என்பவர் எனவும் இவர் சிறுப்பிட்டி, நீர்வேலியைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காட்டினர்.

வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கெண்ட பருத்தித்துறை பதில் நீதிபதி பா. சுப்பிரமணியம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பரிசோதனையில் நீரில் மூழ்கியதில் மூச்சுத்திணறி மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டதையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-60)

# வாகன விபத்தில் பெண் படுகாயம்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் உள்ள இமையாணன் பகுதியில் முச்சக்கர வண்டியும் ஹயஸ் வான் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த யோகேஸ்வரன் சுதர்சனா (வயது -28) என்பவரே படுகாயங்களுக்கு இலக்கானவராவார்.

படுகாயங்களுக்கு உள்ளான இளம் பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-60)

# ஜெனரேட்டர் புகையை சுவாசித்த மருத்துவர் உட்பட மூவர் மயக்கம்

(கரணவாய்)

தனியார் வைத்திய நிலையம் ஒன்றில் ஜெனரேட்டர் புகையினைச் சுவாசித்ததாகத் தெரிவித்து மருத்துவர் உட்பட மூவர் மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நடந்ததாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் திருமகள் வீதி, நெல்லியடியைச் சேர்ந்த பல்வைத்தியரான அருள்பிரகாசம் செந்தில்குமரன் (வயது 34) மற்றும் வதிரி, கரவெட்டியைச் சோந்த சந்திரலிங்கம் துளசிகா (வயது - 20), தொண்டைமானாறைச் சேர்ந்த தர்மலிங்கம் தர்மினி (வயது - 26) ஆகியோரே மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு வேளை மின்சாரம் துண்டிக்கப்பட்ட போது ஜெனரேட்டரை இயக்கியதாகவும் அவ்வேளை அப்புகை அறையினுள் வியாபித்திருந்ததாக கூறப்படுகிறது.

அச்சமயம் குளிரூட்டி ஆழியை இயக்கிய போது அவர்கள் ஒருவித வாயுவை சுவாசித்து மயக்கமடைந்ததாக கூறப்படுகிறது.

இதனையடுத்து மயக்கமடைந்த மூவரும் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (செ-60)

# விக்கியின் அதிருப்தி...

ர்பாக இந்திய - இலங்கை அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் பங்கேற்க புதுடில்லி சென்றடைந்த அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிபிசி தமிழோசையின் ஃபேஸ்புக் நேரலையில் பங்கேற்றார். இதன் போது அங்கு கருத்துரைத்த சுமந்திரன்,

மக்களுக்குஅரசியல்வாதிகள்மீதுநம்பிக்கை ஏற்படாமல் இருப்பது நியாயமான விடயம் தான் அதற்காக மக்களுடைய கருத்தை முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் கூறு வதால் த.தே.கூட்டமைப்புக்கு எந்த விதத் திலும் பாதிப்பு வராது.

இலங்கையில் போர் குற்ற விசாரணை தொடர்பான விடயங்களும், காணாமல் போனவர்களை கண்டுபிடிப்பதிலும் மிக மிகத்தாமதமாக பணி நடந்து வருகிறது. எனினும் இலங்கையில் எந்த அரசாங்கம் வந்தாலும் இவ்விடயங்களைத் தட்டிக் கழிக்க முடியாது.

இலங்கை அரசாங்கம் பொறுப்பு கூறல் நடவடிக்கையை ஏற்றுக் கொண்டதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வற்புறுத்தல்தான் காரணம். ஆகவே அதன் அரசியல் தாக்கத்தை குறைக்க நாம் எப்போதும் அனுமதிக்க மாட்டோம்.

போர் முடிவடைந்த போது பௌத்தமயமாக்கல் சம்பவங்கள் நடந்தன. பின் தணிந்திருந்த நிலையில் மீண்டும் திடீரென அவை துரிதம் அடைந்துள்ளன.

இதற்கு பின்னால் இருந்து செயல்படகூடியவர்கள் யார் என்று எங்களுக்கு தெரியும்.

இதுபோன்ற செயற்பாடுகள் நல்லிக்கணத்திற்கு எதிரானவை. இப்படியான சம்பவங்கள் நடைபெற கூடாது என்பதில் நாம் தெளிவாக இருக்கிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்ற கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். அதுகுறித்து முஸ்லிம் மக்களோடும் முஸ்லிம் தலைவர்களோடும் பேசிக் கொண்டிருப்பதாகவும் சுமந்திரன் தெரிவித்தார.


**பிரத்தியேக வகுப்பு**

தரம் 6 தொடக்கம் O/L வரை **கணிதமும்** தரம் 10, 11க்கான **வணிகக்கல்வியும் கணக்கீடும்** அனுபவமிக்க ஆசிரியரால் குழுவாகவோ/ தனியாகவோ வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 - 6452622
(6537)

**யாரிடம் பேசுவது**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை...
என்பன போன்ற எண்ணங்களா?
எம்முடன் பேசுங்கள்
**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மதசார்பற்றது | ரகசியமானது | இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(C-6333)

**விற்பனைக்கு**

★ யாழ் நகரில் விக்டோரியா வீதியில் 100 பேர்ச்சஸ் காணி வீட்டுடன்
★ நல்லூர் கோயிலுக்கு அண்மையில் கோயில் வீதியில் (Temple Road) 100 பேர்ச்சஸ் காணித் துண்டும்
★ பலாலி வீதி, பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில் 60 பேர்ச்சஸ் காணியும்
★ திருநெல்வேலியில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புடன் கூடிய வீடும்
★ திருநெல்வேலி பலாலி வீதியில் 100 பேர்ச்சஸ் காணித்துண்டும்
★ யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் 3 பரப்பில் அமைந்த வீடும் காணியும் மற்றும் 2 பரப்பில் அமைந்த வீடும் காணியும்
★ கோண்டாவில் சந்திக்கு அண்மையில் 300 பேர்ச்சஸ் காணித் துண்டும் உடன் விற்பனைக்கு
(C-6339)

தொடர்புக்கு:- கனகசபை தர்மகுலசிங்கம் 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P. 077 7232 535

# 31ம் நாள் நினைவஞ்சலி

## அமரர் முருகேசு கனகம்மா



பிறப்பு:-27.10.1936

இறப்பு:- 09.10.2016

கடந்த 09.10..2016 இறையடியெய்திய எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி. கெ.சோதிலிங்கம் அவர்களின் மாமியார்

**அமரர் முருகேசு கனகம்மா**

அவர்களின் 31 ஆம் நாள் ஞாபகார்த்த கிரியைகள் நாளை 08.11.2016 அன்று இடம்பெற இருப்பதால் அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும்**
**பாடசாலை சமூகம்,**
**யா/ நாகர்கோவில் அ.மி.த.க.பாடசாலை.**

(6535)

# ஆட்டோ சாரதித் தடைச்சட்டம்

(கொழும்பு)

இளைஞர்கள் ஆட்டோச் சாரதிகளாக செயற்படுவதைத் தடுக்கும் வகையிலான யோசனைகள் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 35 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சாரதிகளாக வரமுடியாதவாறு இந்த சட்டங்கள் அமையவுள்ளன.அத்துடன், வீட்டில் பயன்படுத்தும் ஆட்டோக்கள் மற்றும் வாடகைக்கு செல்லும் ஆட்டோக்கள் என்பவற்றை வகைப்படுத்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இளைஞர்கள் ஆட்டோ சாரதிகளாக மாறும் நிலைமை அதிகரித்து வருவதாக சமூகத்திலிருந்து முறைப்பாடுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இதனைத் தடுப்பதற்கே இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-7)

# 3ம் மாத நிறைவில் நீங்காத நினைவுகளுடன்...

*Third Month Remembrance*
*In Loving Memory of*
Piyawathi Hapuarachchi
(No .86 , Battuwatte ,Ragama)
Gone to Rest :
***7 th August 2016***
(Beloved mother of
**Mrs. M. H. A. Sajeevani,**
Lecturer of sinhala ,
Kopay Teachers College )
May you rest in peace at heavenly home with the Supreme Bliss of Nirvana



Fondly remembered by
The principal and staff Guild,
Kopay Teachers College, Kopay.

(C-6350)

# யாழ்ப்பாணம் மாநகர சபை
## பகிரங்க ஏலம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நீர்வேலைப் பகுதியில் பழுதடைந்த நிலையில் உள்ள 18 பம்கள் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன. இதன் விபரங்களை அலுவலக நேரத்தில் யாழ். மாநகர இந்து விடுதியில் பார்வையிடலாம்.

ஆகக் குறைந்த கேள்வித் தொகை (01பம்) :ரூபா 6000.00

பகிரங்க ஏலம் நடைபெறும் இடம் : யாழ். மாநகர இந்து விடுதி.

காலம் : 22.11.2016 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணி


**ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம் மாநகர சபை.**

(சி-6351)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
1916
10
02



கந்தன் பாதத்தில்
2006
10
02

## அமரர் செல்லத்துரைபத்தர்- கந்தசாமிபத்தர்

திதி:- வளர்பிறை ஸப்தமி (07.11.2016)

ஐயிரண்டு வருடங்கள் சென்றாலும்-ஐயா
மேதினியில் எம் துயரம் ஆறாது என்றென்றும்
அன்புடன் எமை அணைத்து நல் அறிவுரைகள் கூறி
இப் பாரினில் பண்புடன் வாழ வைத்தீர்
பணிந்திடுவோம் உம் பாதம் என்றென்றும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(6527)

இல.18, சபாபதி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா
நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


# Yarl Beauty & Language's Skills College

YBLSC



அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

கிழமை நாள் பிரிவுகள் 11.11.2016 (வெள்ளி) 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு பிரிவுகள் 12.11.2016 (சனி) 10.00 மணிக்கு

அனைத்து பயிற்சிகளும் மிகச்சிறந்த செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆங்கில, சிங்கள மொழிக்கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

முதலில் இணைந்துகொள்ளும் 10 மாணவர்களுக்கு பதிவுக்கட்டணம் இலவசம்.

பயிற்சியின் நிறைவில் தொழில்வாய்ப்பு, சுய தொழில் ஆரம்பிப்பதற்கான வங்கி கடன் வசதிகள் என்பன ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும். –இயக்குனர்–

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை )


# இராசி பலன்

07.11.2016
(ஐப்பசி 22, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சப்தமி முற்பகல் 8.51 மணிவரை
திருவோணம் பின்னிரவு 12.28 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம்-பூசம் | | |
| சந் செவ் | | | ராகு |
| | சனி சுக் புத | சூரி | குரு |

**மீனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** குடும்பத்தில் நிலவிவந்த குழப்பங்கள் அகலும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்:** கவலைகள் தீர கந்தனை வழிபடவேண்டிய நாள், எந்தக் காரியத்திலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, மனச்சோர்வுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** நீண்ட நாளைய நெருங்கிய நண்பர் ஒருவரின் நட்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அச்சுறுத்தலாகத் தோன்றிய தகவல் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நீண்ட நாட்கள் தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு:** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, எதிர்பாராத தனவரவுகள் இடம்பெறலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

# தேசிய நல்லிணக்கமே மக்களின் கோரிக்கை

## லால் விஜயநாயக்க தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஜனநாயக மயமாக்கப்பட்ட சமூகமும் தேசிய நல்லிணக்கமுமே இந்த நாட்டு மக்களின் பொதுவான கோரிக்கையாகவுள்ளது என அரசியல் மறுசீரமைப்பு மீதான மக்கள் பிரதிநிதித்துவ குழுவின் தவிசாளர் லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அமைக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு சட்ட மூலம் தொடர்பான கலந்தாலோசனை நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் மக்களுக்கு தேவையான உரிமைகள் சட்ட மூலம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் மறுசீரமைப்பு மீதான மக்கள் பிரதிநிதித்துவ குழுவில் உள்ள 20 உறுப்பினர்களில் 19 பேர் சகல மாவட்டங்களுக்கும் சென்று பகிரங்க அமர்வுகளை நடத்தி மக்களின் கருத்துக்களை அறிந்தோம். அரசியல் யாப்பு தொடர்பாக 25 பிரதான விடயங்கள் தொடர்பாக கருத்துக்கள் யோசனைகளை கோரியிருந்தோம்.

சுமார் 1500 பேர் வாய்மூலமாக தெரிவித்தார்கள். தொழிற்சங்கங்கள், சுயாதீன ஆணைக்குழுக்கள், அரசியல் கட்சிகள் சிவில் சமூக அமைப்புக்கள், சமூகவியலாளர்கள் என சுமார் 3 ஆயிரம் பேர் எழுத்து மூல வேண்டுகோளை தெரிவித்தனர்.

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையரும் தமது கருத்துக்களையும் தெரிவித்தார்கள். அனைத்து கருத்துக்களும் உள்ளடக்கி எமது அறிக்கையை ஜனாதிபதி பிரதமர் மற்றும் அரசியல் சாசன சபைக்கு சமர்ப்பித்துள்ளோம்.

முதலில் மக்கள் விரும்புகின்ற விடயங்களை அவர்களின் கருத்துக்கள் நீக்காமல் வழங்கியிருந்தோம். அத்துடன் எமது சிபாரிசுகளையும் எமது கருத்துக்களையும் முன்வைத்திருந்தோம்.

மக்களின் கருத்துக்கள் மூலம் நாம் அறிந்த விடயம் என்னவென்றால் அரசியல் யாப்பு சீர்திருத்த செயன்முறை என்பது தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய விடயம் தேர்தலில் மக்கள் அனைவரும் சமூகத்தில் ஜனநாயக மயமாக்கலை எதிர்பார்த்து தான் வாக்களித்துள்ளார்கள்.

எனவே மக்களின் முதலாவது கோரிக்கை இந்த சமூகம் ஜனநாயகமயமாக்கப்பட வேண்டும் என்பதும் அடுத்தது நாட்டில் தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற பிரதான விடயம் தொடர்பாக விருப்பம் தெரிவித்தார்கள்.

இந்த விடயம் தொடர்பில் எப்பகுதி மக்களிடையேயும் விவாதமான கருத்துக்கள் ஏற்பட்டிருக்கவில்லை. எமது குழுவின் கருத்தும் அதுவே. ஆனால் அரச தரப்பில் வேறுபட்ட கருத்துக்கள் பல தரப்பிடம் இருந்தும் கிடைத்தன.

தேசிய நல்லிணக்கம் தொடர்பாக அரசை மீள கட்டியெழுப்ப வேண்டும் என்ற விடயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதில் பிரதானமாக வடக்கில் அநேகமான மக்கள் சமஷ்டி முறை வேண்டும் என்ற கருத்தை முன் வைத்தார்கள். அத்துடன் தெற்கில் இருந்தவர்கள் ஒற்றையாட்சி முறையை வேண்டினார்கள்.

இவ்விடயத்தில் வடக்கு தெற்கு பிளவு என்று பார்க்கும் பொழுது தெற்கைப் பொறுத்த வரையில் தெற்கில் உள்ள கல்வியலாளர்கள் அரசியல் அவதானிகள் போன்ற உயர் மட்டத்தை சேர்ந்தவர்கள் சமஷ்டியை விரும்பினார்கள். ஆனால் பொதுவான மக்கள் ஒற்றையாட்சியை கோரினார்கள்.

வடக்கு தெற்கு என்று பார்க்கும் போது சமஷ்டிக்கும் ஒற்றையாட்சிக்கும் ஆதரவு இருந்தது. தெற்கில் ஒற்றையாட்சியை விரும்பியவர்கள் கொடுத்த காரணம் என்னவென்றால் நாட்டில் பிளவு ஏற்படுவதை தடுத்தல் என தெரிவித்தார்கள்.

அவர்கள் அதை குறுகிய வழியில் தான் பார்க்கிறார்கள். சமஷ்டி முறை அமுல்படுத்தப்பட்டால் நாடு இரண்டாக பிரிவடைந்து விடும் என்ற கருத்தை அம் மக்களிடையே சிலர் திணித்து வைத்துள்ளார்கள். வடக்கில் சமஷ்டி முறை ஏன் என கேட்ட போது தம்மை சமமாக நடத்துவதில்லை என விளக்கம் தெரிவித்தார்கள்.

இக் கட்டத்தில் அரசின் கட்டமைப்பு தொடர்பாக பாரிய மாற்றத்துக்கு மக்கள் தயாரில்லை என்பதை அறிய முடிகிறது. படிப்படியாக விருத்தி அடைய வேண்டும். பாரிய அளவில் அரசியல் கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்தினால் தற்போதுள்ள ஒப்பீட்டளவிலான ஸ்திரத்தன்மை குலைந்துவிடும். மக்கள் குழப்பமடைவார்கள் என்பதை தெரிவித்துள்ளோம்.

மக்களுக்கு அதிகாரப் பரவலாக்கல் தேவைப்படுகிறது. அதாவது தற்போதைய மாகாண சபை முறைமை போதியளவு செயற்திறனாக இல்லை என்றும் மேலும் அதிகாரட வழங்க வேண்டும் என வடக்கு தெற்கில் சமமாக கருத்து தெரிவித்துள்ளார்கள்.

மேலும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக நீண்ட அத்தியாயத்தை தயாரித்துள்ளோம். அதுவே மிக முக்கியமானதாகவும் இருந்தது. அது தொடர்பாக கருத்து வேற்றுமை இல்லாமல் பல விடயங்களை தெரிவித்தார்கள். உலக நவீன போக்குக்கு ஏற்றவாறு இது அமைக்கப்பட வேண்டும் என சிபாரிசை முன்வைத்துள்ளோம். அடிப்படை உரிமை மீறல் தொடர்பான அத்தியாயம் பொருளாதார சமூக கலாசார உரிமைகளை உள்ளடக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளோம்.

அடிப்படை உரிமை மீறல் தொடர்பான விடயம் தொடர்பாக ஓரம் கட்டப்பட்ட பல ஆதிவாசிகள் தெலுங்கு பேசும் மக்கள் பெண்கள் பலர் தமக்கு சமமான உரிமை வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். எனவே ஓரம் கட்டப்பட்டவர்கள் சமூகத்தில் முன்னுக்கு கொண்டு வரப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம்.

அத்துடன் மொழி உரிமை, சாதி முறையை ஒழிக்கப்பட வேண்டும் என கோரியிருந்தார்கள். எனவே அவற்றுக்கெல்லாம பொதுவாக பாரபட்சத்துக்கு எதிரான ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என விசேட விதமாக நாம் சிபாரிசு செய்துள்ளோம். அரச பொலிஸ் நீதி துறைகள் சுயாதீனமாக இயங்கப்பட வேண்டும என வும் தெரிவித்துள்ளோம்.

உரிமை அடிப்படையிலான அரசியல் யாப்பு அதிகாரப்பகிர்வு, சமத்துவம், அனைவரும் உள்வாங்கப்பட்ட சமூகம் போன்ற விடயங்கள் பிரதானமாக மக்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்கள் ஆகும். அவற்றை பரிசீலித்து சிபாரிசுகள் செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-௮)

# குழந்தைவேல் சுவாமிகள் சமாதி சிவாலய திருக்குடமுழுக்கு விழா







படங்கள்:- பொ.சோபிகா

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை ஈழத்துச் சித்தர் பரம்பரை முன்னோடிகளில் ஒருவரான குழந்தைவேல் சுவாமிகள் சமாதி சிவாலயம் மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் மீள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த 4 ஆம் திகதி செந்தமிழ் திருக்குடமுழுக்கு விமரிசையாக நடைபெற்றது.

ஈழத்துச் சித்தர்களின் முக்கியமானவராகத் திகழ்ந்த கடையிற் சுவாமிகளின் நேரடிச் சீடரான குழந்தை வேல் சுவாமிகள் 1908ஆம் ஆண்டு கீரிமலை மண்ணிலே சமாதியடைந்தார். அவர் சமாதி அடைந்த கீரிமலை தீர்த்தக் கரையிலேயே அவருக்குச் சமாதி அமைக்கப்பெற்றுச் சிவாலயமும் அமைக்கப்பெற்றது.


நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமை வாய்ந்த குழந்தைவேல் சுவாமிகள் சமாதி சிவாலயம் நாட்டில் கடந்த கால யுத்த சூழ்நிலைகளால் முழுமையாகச் சேதமடைந்தது.

குழந்தைவேல் சுவாமிகளின் குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பில் சைவமகா சபையின் சிவதொண்டர்களின் ஆதரவுடன் மீள் புனருத்தாரண சபையால் பல இலட்சம் ரூபா நிதியில் இவ்வாலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.

செந்தமிழில் இடம்பெற்ற திருக்குடமுழுக்கு விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தென்கையிலை ஆதீனம் அகத்தியர் அடிகள், யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் சித்தர் பீடத்தினுள் புதிதாகச் சைவ அறப்பணி மையம் நிர்மாணிக்கப் பெற்றுள்ளது. குறித்த அறப்பணி மையத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த அறப்பணி நிலையம் மூலம் எதிர்காலத்தில் யோகாசனம், தியானம் மற்றும் எமது சமுதாயத்திலுள்ள மக்களை ஆற்றுப்படுத்தும் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனச் சைவமகா சபையின் செயலாளரும், மீள் புனருத்தாரண சபையைச் சேர்ந்தவருமான வைத்திய கலாநிதி ப. நந்தகுமார் தெரிவித்தார். (இ-9)



யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த மரியதாஸ் ரிறோனுக்கு கடந்த மாதம் 23 ஆம் திகதி தேசிய சமாதான சங்கத்தினால் தேசபந்து எனும் விருது கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

## முன்னாள் ராணுவத்தினர் மூவர் வைத்தியசாலையில்



கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த முன்னாள் இராணுவத்தினர் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேவை ஓய்வுக்கு முன்னர் கடமையில் இருந்து இடைவிலகி அங்கவீனமான இராணுவ வீரர்கள், தமக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் எனக் கோரிபோராட்டம் நடத்தி வருகின்றனர்.


இவ்வாறு ஆறு முன்னாள் இராணுவத்தினர் போராட்டம் நடத்தி வரும் நிலையில், அவர்களில் மூவர் நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அங்கவீனமான இராணுவ வீரர்கள் தொடர்ந்து ஏழாவது நாளாக சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பல்கலை.மாணவனின் இழப்புக்கு பரிகாரம் கிடைக்க வேண்டும்

## சுலக்சனின் பெற்றோரை சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொக்குவில், குளப்பிட்டி பகுதியில் கடந்த 20 ஆம் திகதி துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களில் ஒருவரான விஜயகுமார் சுலக்ஷனின் (வயது-24), பெற்றோரை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றையதினம் சுன்னாகம் கந்தரோடை பகுதியிலுள்ள இல்லத்தில் வைத்து சந்தித்து தனது அனுதாபங்களை தெரிவித்தார்.

குடும்பத்தின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடியதுடன் அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

மாணவனின் இழப்புக்கும் அதனால் குடும்பத்துக்கு ஏற்பட்ட நட்டத்துக்கும் பரிகாரம் கிடைக்க வேண்டும். இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசுவோம் என தெரிவித்ததுடன் குறித்த விடயம் தொடர்பாக மாணவனின் குடும்பத்தினரை மாவை சேனாதிராஜாவுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறிச் சென்றார்.

இச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் இணைந்திருந்தார். (இ-9)

# பிணை முறி மோசடிகளுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினால் போராட்டம்

பிணை முறி மோசடிகளுக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினால் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடிகளினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாரியளவிலான பாதிப்பு குறித்து பல்வேறு வழிகளில் எதிர்ப்பினை வெளிப்படுத்த கூட்டு எதிர்க்கட்சி உத்தேசித்துள்ளது.

மக்கள் கூட்டங்கள், எதிர்ப்பு போராட்டங்கள், துண்டுப் பிரசுர விநியோகம் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் போராட்டங்கள் நடத்தப்பட உள்ளன. அண்மையில் நடத்தப்பட்ட கூட்டு எதிர்க்கட்சியின், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவது குறித்தும் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பங்கேற்றதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# சீனத்தூதுவரின் கருத்து குறித்து வெளிவிவகார அமைச்சு ஆராய்வு

சீனத்தூதுவர் கடந்த வாரம் கொழும்பில் வெளியிட்ட கருத்து .தொடர்பில் ஆராய்வதாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இலங்கையின் அபிவிருத்தி உட்பட்ட விடயங்கள் குறித்து சீனத்தூதுவர் விமர்சனங்களை வெளியிட்டிருந்தார்.

இலங்கையின் ஒவ்வாத அரசியல் குறித்து தாம் திருப்தி கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நாட்டின் கொள்கையை மாற்றிக் கொள்ளாது விட்டால் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படலாம் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

அத்துடன் சீனாவிடம் இருந்து அதிக வட்டிக்கு கடன் பெறப்பட்டதாக சில அமைச்சர்கள் கூறிவருவதையும் அவர் கடுமையாக விமர்சித்திருந்தார். இதனையடுத்தே இது தொடர்பில் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து இந்தவாரம் தீர்மானிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# கண்டி மாநகரசபை உறுப்பினர்கள் சீனாவுக்கு விஜயம்;10 மில்.செலவு

கண்டி மாநகரசபை கலைக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், அதன் உறுப்பினர்கள் சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்துக்காக சபையின் 10 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகம் இதனை கண்டறிந்துள்ளார்.

2016ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் திகதியன்று மாநகரசபை கலைக்கப்படவிருந்த நிலையில் உறுப்பினர்கள் ஜூன் 26 முதல் 28ஆம் திகதி வரை சீனாவுக்கான சுற்றுலாவை மேற்கொண் டுள்ளனர்.

எனினும் இவர்கள் இந்த நிதியை பயன்படுத்துவது குறித்து எவ்வித தெளிவும் இல்லாமல் அதனை செலவிட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இந்தப்பயணத்தின் போது மாநகரசபையின் முதல்வர், ஆணையாளர், கணக்காளர், நிர்வாகி உட்பட 30 பேர் சீனா சென்று திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:19
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BScEng/பொறியியலாளர்
தொ.இ: B/6403

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி செவ் 1 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/6405

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 53சூரி செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HNDA/அரசதொழில்
தொ.இ: B/6407

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 43செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BA, MA/அரச தொழில்
தொ.இ: B/6408

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம் கார்த்திகை
செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/6401

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: G/6402

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 38
உயரம்: 5'2'
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6406

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: G/6427

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.
இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.

# தேசிய பாதுகாப்பு யாருடைய கையில்?



தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சுப் பதவியொன்றை உருவாக்குவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை செய்து வருவதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

முப்படைகளினதும் பிரதம தளபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருக்கும் ஜனாதிபதி இத்தகையதொரு பதவியை உருவாக்குவது தொடர்பாக ஆட்சிப் பொறுப்பையேற்று கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஆலோசனை நடத்த தொடங்கியிருக்கிறார்.

பாதுகாப்புத்துறைக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டுள்ள, ஏற்பட்டு வருகின்ற இடைவெளி தான் இதற்குக் காரணம்.

இராணுவப் புரட்சிஒன்றுக்கு மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ தரப்பு முயற்சிகளை முன்னெடுத்தாலும் ஆச்சரியமில்லை என்று அண்மையில் தான் அமைச்சர் ராஜித சேனா ரட்ன குறிப்பிட்டிருந்தார்.

அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் இடையில் விரிசலை தோற்றுவிக்கின்ற வகையில் மகிந்த ராஜபக்ஷ அணியினர் மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் மற்றும் வெளியிட்டு வரும் கருத்துக்கள் மாத்திரம் இத்தகையதொரு கருத்தை அமைச்சர் ராஜித சேனாரட்ன வெளியிடுவதற்கு காரணமாக இருந்திருக்காது.

இராணுவத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் அதிகரித்து வருகின்ற இடைவெளி தொடர்பாக தோன்றியிருக்கும் அச்சமும் கூட இதற்கான காரணமாக இருந்திருக்கலாம்.

இத்தகையதொரு இடைவெளியின் விளைவினால் கூட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளிவந்திருக்கலாம்.

சீருடை அணிந்த தளபதிகள் விசாரணைக்காக அழைக்கப்படுவதுவேதனையளிப்பதாக ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள முன்னாள் படைத்தளபதிகளுக்கு ஆதரவாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருந்தார்.

அது மட்டுமன்றி ஊடக வியலாளர் பிரகீத் எக்னெலி கொட கடத்தல் வழக்கில் படையினர் குற்றம் இழைத் திருந்தால் அவர்களைப் பிணையில் விடுவித்து விட்டு வழக்கை நடத்து மாறு தாம் அதிகாரிகளிடம் கோரியதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியானதன் பின்னர் பிரகீத் எக்னெலி கொட கடத்தல் வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பிரதான சந்தேகநபரான லெப். கேர்ணல் சம்மி குமாரரத்ன உள்ளிட்ட இரண்டு இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

இராணுவத் தரப்புடனான இடைவெளி அதிகரித்து வருவதை உணர்ந்து வெளியிட்ட கருத்துகளாகவே ஜனாதிபதியின் இலங்கை மன்றக் கல்லூரி உரை அமைந்திருக்கின்றது.

இத்தகையதொரு பின்னணியில் தான் பாதுகாப்பு நடவடிக்கைகளை தனியாக கவனிப்பதற்கு ஒரு அமைச்சரை நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.

அரசியலமைப்பு சட்டத்தின் படி பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி இருந்தாலும் அவரால் பாதுகாப்பு அமைச்சரின் பணிகளை முழுமையாக ஆற்ற முடியாது.

பாதுகாப்பு அமைச்சு என்பது முப்படைகளையும் சேர்ந்த மூன்று இலட்சத்துக்கும் அதிகமான படையினர் மற்றும் பணியாளர்களைக் கொண்ட ஒரு. பெரிய கட்டமைப்பு.

அதைவிட பெரிய பொறுப்பாகவும், உன்னிப்பாகவும் கவனிக்கப்பட வேண்டிய அமைச்சும் கூட.

பாதுகாப்புக் கட்டமைப்புக்களை கட்டுக்கோப்புடன் வழி நடத்தல், ஒருங்கிணைத்தல், அவற்றின் பிரச்சினைகளைக் கையாளுதல் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான புலனாய்வு தகவல்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்தல் என்று விடயங்களை அதிக பொறுப்புடன் கையாள வேண்டிய அமைச்சு இது.

அதிக பணிச்சுமைகளைக் கொண்ட ஜனாதிபதியினால் பாதுகாப்பு அமைச்சருக்குரிய கடமைகளை முழுமையாகவும் திருப்தியாகவும் மேற்கொள்ள முடியாது. இது கடந்த கால அனுபவமும் கூட.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரை நடத்திய முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன தொடக்கம் மகிந்த ராஜபக்ஷ வரையிலான எல்லா ஜனாதிபதிகளுமே பாதுகாப்பு அமைச்சின் மீது தாம் அதிகாரம் செலுத்தியதில்லை.

அதற்குப் பொறுப்பாக ஒரு பிரதியமைச்சரை அல்லது இராஜாங்க அமைச்சரை அல்லது பாதுகாப்புச் செயலரை நியமித்தே இந்த விடயத்தைக் கையாண்டிருக்கின்றனர்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் அதிகாரபூர்வமற்ற பாதுகாப்பு அமைச்ராக இருந்தவர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க.

1962 ஆம் ஆண்டு இராணுவப் புரட்சிக்கான முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்ட போது அதனை ஆரம்பத்திலேயே முறியடிப்பதில் அப்போது 31 வயதேயான பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க தான் முக்கிய பங்காற்றியிருந்தார்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் பதில் பாதுகாப்பு மற்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி தான் ஒட்டுமொத்த பாதுகாப்பு விடயங்களையும்கையாண்டார்.

ஒபரேசன் லிபரேசன் நடவடிக்கையில் அவர் நேரடியாகச் சென்று வழி நடத்தியிருந்தார்.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த போது ஜெனரல் ரஞ்சன் விஜேரத்ன சக்தி வாய்ந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக விளங்கியிருந்தார்.

ரஞ்சன் விஜேரத்ன 1991 இல் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட பிறகு பாதுகாப்பு விவகாரங்களை வலுவாகக் கவனிக்கும் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆர். பிரேமதாச 1993 ஆம் ஆண்டு குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர் பதவிக்கு வந்த டி.பி.விஜேதுங்கவின் காலத்தில் பாதுகாப்பு விவகாரங்களை ஒருங்கிணைத்த பாதுகாப்பு பிரதியமைச்சர் ஜோன் அமரதுங்கவும் கவர்ச்சியான ஒருவராக விளங்கவில்லை.

எனினும் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியானதும் தனது மாமனாரான கேர்ணல் அனுருத்த ரத்வத்தயை பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமித்தார்.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியான அவரே போர் தொடர்பான எல்லா முடிவுகளையும் எடுத்தார். போர் முனைகளுக்குச் சென்று படையினரை உற்சாக மூட்டினார். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதற்காக அவருக்கு ஜெனரல் பதவியுயர்வும் சந்திரிகாவினால் அளிக்கப்பட்டது.

சந்திரிகாவுக்குப் பிறகு பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷவுக்கு யார் மீதும் நம்பிக்கையில்லை. அதனால் அமெரிக்காவிலிருந்த தனது சகோதரர் லெப்.கேர்ணல் கோத்தபாய ராஜபக்ஷவை வரவழைத்து அவருக்கு பாதுகாப்புச் செயலர் பதவியை வழங்கினார்.

இதற்கு முன்னர் அரசியல்வாதிகள் அல்லது இராணுவத்திலிருந்து விலகிய பின்னர் அரசியல்வாதிகளாக மாறியவர்கள்தான் பாதுகாப்பு விவகாரங்களை கையாண்டிருந்தனர்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன தனது அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியை நம்பினார். பிரேமதாசாவும் அவ்வாறே ஜெனரல் ரஞ்சன் விஜயரத்னவை நம்பினார். ஆனால் சந்திரிகாவும், மகிந்த ராஜபக்ஷவும் தமது அமைச்சரவைச் சகாக்களை நம்பத் தயாராக இருக்கவில்லை. மாமனாரையும் தம்பியையுமே இந்தப் பொறுப்பில் வைத்திருந்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த இரண்டு ஆண்டுகளில் பாதுகாப்பு அமைச்சை தனிஆளாகக் கையாள்வதில் தோல்வியைச் சந்தித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ஐ.தே.க.வின் இளம் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெறாமகனுமான ருவான் விஜேவர்தன நியமிக்கப்பட்ட போது அவர் பாதுகாப்பு அமைச்சை முழுமையான அதிகாரத்துடன் கையாள்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் பதவியேற்ற சில வாரங்களிலேயே வடக்கில் படைவிலக்கம் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துக்கள் அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்த, அவரது சிறகுகள் வெட்டப்பட்டன. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான ருவான் விஜேவர்தன பெயரளவில் தான் பாதுகாப்பு அமைச்சுக்கு வந்து போகிறாரே தவிர அதிகாரம் அவரிடத்தில் இல்லை.

படையினர் நலன்புரி சார்ந்த அதிகாரசபைகளை மாத்திரமே அவரால்கையாள முடிகிறது. ஒட்டுமொத்த பாதுகாப்பு விவகாரங்களையும் கையாளும் திறன் அவருக்கு இல்லை என்பதும் உறுதியாகி இருக்கிறது.

அதேவேளை முன்னாள் பாதுகாப்புச் செயலராக இருந்த பஸ்நாயக்கவும் சரி, இப்போதைய பாதுகாப்புச் செயலரான கருணாசேன ஹெட்டியாராச்சியும் சரி, சிவில் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்பதற்காக நியமிக்கப்பட்டவர்களே தவிர, பாதுகாப்புத்துறை சார் நிபுணத்துவம்பெற்றவர்கள் இல்லை. இவ ர்களால் பாதுகாப்புக் கட்டமைப்புக்குள் ஒரு பிணைப்பை ஏற்படுத்த முடியாதிருக்கிறது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது அதில் பங்களித்தவரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இத்தகையதொரு பதவியைத்தான் எதிர்பார்த்தார். ஆனால் அவருக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அதனால் விலகிச் சென்று தனித்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த அவர் மீண்டும் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றம் வந்த போதிலும் அவருக்கு பாதுகாப் புடன் தொடர்புடைய அமைச்சு பதவி வழங்கப்படவில்லை.

இப்போது பாதுகாப்பு அமைச்சை முழுமையாக கையாளும் ஒரு அமைச்சுப் பதவியை உருவாக்க ஜனாதிபதி முடிவு செய்தால் அந்தப் பதவிக்கு யாரை நியமிப்பார் என்ற கேள்வி எழுகிறது.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பொருத்தமானவராக இருந்தாலும் அவரை அரசாங்கம் முழுமையாக நம்புமா? இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுபவரிடம் ஆளுமையை விட அதிகளவாக நம்பகத்தன்மை, குறிப்பாக ஜனாதிபதி மீதான விசுவாசத்துக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும்.

அவ்வாறான ஒருவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பாரா? அல்லது ஐ.தே.கவைச் சேர்ந்தவராக இருப்பாரா? என்ற சிக்கலும் உள்ளது.

பாதுகாப்புத் தரப்பைக் கையாளும் பதவியொன்றை உருவாக்கினால் மாத்திரம் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. அந்தப் பதவி யாருக்கு வழங்கப்படவுள்ளது என்பதைப் பொறுத்தே அது தீருமா? அல்லது நீளுமா? என்பது தெரியவரும்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 500 மேசன் தொழிலாளிகளுக்கு பயிற்சிக்கான உபகரணங்களும் சீருடையும் தேசிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நேற்று முன்தினம் பிரதம நீதியரசராகக் கலந்து கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆயிரத்து 500 மேசன் பயிற்சியாளர்களுக்கு உபகரணங்களும் சீருடையும் வழங்கியதோடு 111 வீட்டுரிமையாளர்களுக்கு சீமெந்தும் வைபவ ரீதியாக வழங்கி வைத்தார். (படங்கள்:மல்லாவி, பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)

## அரசறிவியற்கழக அங்குரார்ப்பணம்

வடக்கு மாகாணத்திற்கான அரசறிவியற் கழக அங்குரார்ப்பண நிகழ்வு 23.10.2016 அன்று கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. யாழ்ப்பாண பல்கலைக் கழக அரசறிவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கத்தை தவிசாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

செயற்குழு தலைவராக இ.ஸ்ரீரங்கநாதன், செயலாளராக த.விஜயகுமார், பொருளாளர் மு.மயூரன், உபதலைவராக ஜெ.நிசாகரன், துணைச் செயலாளராக தி.ஜெகதீஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இத்துடன் வலயப் பிரதி நிதிகளும் தெரிவாகினர்.

கழகத்திற்கான யாப்பு நகல் கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. வடக்கு மாகாண பாடசாலைகளில் உயர்தரத்தில் அரசியல் விஞ்ஞான பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களை உள்ளடக்கிய இவ் அமைப்பு பாடமேம்பாட்டிற்காகவும் சிவில் சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கும் உதவும் என வலியுறுத்தப்பட்டது. (2)

# 208 பேருக்கு சிறுநீரக நோய்த் தாக்கம்; 10 பேர் பலி; பரிசோதனையில் கண்டறிவு

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இடப் பெயர்வின் பின்னரான மீள் 'குடியேற்றத்தின் போது 6 ஆயிரத்து 680 குடும்பங்களின் 20 ஆயிரத்து 987 அங்கத்தவர்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் சிறுநீரக நோய் தொடர்பில் பரிசோதனை செய்யப்பட்ட முதலாவது கட்டத்தில் 3 ஆயிரம் பேரில் 208 பேருக்கு சிறுநீரக நோய்த் தாக்கம் அறியப்பட்டதுடன் இதுவரை இந்நோய் தாக்கத்தினால் இரண்டு சிறு நீரகங்களும் செயலிழந்த நிலையில்10 பேர் மரணம் அடைந்துள்ளதுடன் 20 பேர் வாராந்தம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்று இரத்த சுத்திகரிப்பு செய்து வருவதான செய்தி வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போர் நடவடிக்கையினாலும் மற்றும் ஏனைய பாதிப்புக்களினாலும் சிறுநீரக நோய்த்தாக்கத்திற்குள்ளான நோயாளர்கள் வாழும் பிரதேசங்களை இனம் காணும் நடவடிக்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட போது துணுக்காய், மாந்தை கிழக்கு, வெலிஓயா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழும் மக்களில் அநேமானவர்களுக்கு இந் நோய்த் தாக்கம் இருப்பது முதலாம் கட்டப் பரிசோதனைகளின் போது தெரிய வந்துள்ளது.

இச் சிறுநீரக நோய் ஏற்படுவதற்கு மூல காரணங்களாக பல விடயங்கள் இருந்த போதும் நிலத்தடி நீரில் கலந்துள்ள இரசாயனப் பொருட்கள் மற்றும் ஆசனிக் கொடி நீயம், பாதரசம், ஈயம், செம்பு போன்ற உலோகப் பொருட்களும் காரணமாகின்றன.

அத்தோடு கல்சியம், மக்னீசியம் கலந்து நீரை அடிக்கடி பருகுதல், நிலத்தடி நீரில் அதிகளவு புளோரைட் அளவு மற்றும் புளோ ரோ அலுமினியம் கலந்து இருத்தல் பாம்புக்கடி, விசம் அருந்துதல், சிறு நீரகத்தின் வைரஸ் தாக்கம் பாதிப்புக்களை ஏற்படுத்தும் கிருமி நாசினிகள் முறையற்ற விதத்தில் விவசாய உற்பத்திப் பயிர்களுக்கு பயன்படுத்துதல் என்பன காரணமாக அமைவதாகவும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

எனவே துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இரண்டாம் கட்ட சிறுநீரக நோய் தொடர்பான ஆய்வுக்கு மீதமாகவுள்ள 17 ஆயிரத்து 987 அங்கத்தவர்களும் உட்படுத்தப்பட இருப்பதால் இதற்கு பொதுமக்கள் பூரணமான ஒத்துழைப்பை வழங்கி உதவ வேண் டும் என மல்லாவிப் பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(2-15)




# பாலை மரக்குற்றிகள் கடத்துவதற்கு தயாரான நிலையில் கைப்பற்று

## கல்மடு காட்டில் சம்பவம்



(பரந்தன்)

கிளிநொச்சி - கல்மடு காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்ட பாலை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்மடு காட்டுப்பகுதியில் உள்ள 5 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்பட்ட சுமார் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட பாலை மரக்குற்றிகளே இவ்வாறு மீட்கப்பட்டதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தல் இடம்பெற்று வரும் நிலையில்,கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கல்மடுநகர் பகுதியில் உள்ள விமானப்படை அதிகாரிகளால் கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சம்பவ இடத்திற்கு சென்ற கிளிநொச்சி முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விசேட குழுவினர் குறித்த மரக்குற்றிகளை மீட்டுள்ளனர்.

இதன்போது கல்மடு காட்டுப்பகுதியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்பட்ட பாலை மரக்குற்றிகளே இவ்வாறு சட்டவிரோதமான முறையில் தறிக்கப்பட்டு விற்பனைக்காக கொண்டு செல்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததுடன் மேலும் ஒரு தொகுதி பாலை மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாக குறித்த குழுவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு சென்ற குழுவினர் மரங்களை வெட்டிய குற்றச்சாட்டில் சம்பவ இடத்தில் இருந்த 7 பேரைக் கைதுசெய்ததுடன், மரங்களை வெட்டுவதற்கு அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியதுடன் ஏற்றிச் செல்வதற்குத் தயாராக இருந்த ஒரு வாகனமும் மீட்கப்பட்டுள்ளது

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இவர்களை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை கிளிநொச்சியில் சட்டவிரோத மரம் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இருவர் கடந்த 3 ஆம் திகதி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிகன்னவின் உத்தரவுக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக. உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதேவேளை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சட்டவிரோதமாக மரங்களை வெட்டி கடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் அக்கராயன். முக்கொம்பன் காட்டுப் பகுதிகளில் சட்டவிரோத மரக்கடத்தல் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் பொலிஸாரும் இதற்கு உடந்தையாக இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# ஆற்றுமணல் அகழ்வு; உழவு இயந்திரத்துடன் சாரதி கைது

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிழவன் குளம் கிராமத்தில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை அகழ்ந்தெடுத்து உழவு இயந்திரத்தில் ஏற்றி பயணித்த வேளை உழவு இயந்திரம் கைப்பற்றப்பட் டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற ரகசியத் தகவலை அடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேரோவின் உத்தரவிற்கு அமைய, பொலிஸ் பரிசோதகர் பிரியதர்சனா தலைமையில் பொலிஸ் கொஸ்தாபல்களான சந்திரபாலா (19638), வசந்த (13816), ஹெட்டியாராச்சி (60588), மில்றோய் (88695) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே உழவு இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்டுள்ள உழவு இயந்திரமும் கைது செய்யப்பட்டுள்ள அதன் சாரதியும் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் முல்லைத் தீவு மாவட்ட நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)



யாழ்ப்பாணத்தில் அண்மையில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பல்க லைக்கழக மாணவன் நடராசா கஜனின் இல்லத்திற்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை சென்ற எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். குடும்பத்தாரின் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்த எதிர்க்கட்சித் தலைவர் அக் குடும்பத்தாருடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதுடன் நட்டஈடு பெற்றுத் தருவதற்கு பூரண முயற்சி செய்வதாகவும் உறுதிமொழி வழங்கினார். (படம்:- மல்லாவிச் செய்தியாளர்)

# அனைத்து இராணுவத்தினரும் ஆவா குழுவுடன் தொடர்புடையவர்கள் என்று நான் கூறவில்லை



(கொழும்பு)

**இராணுவத்திலுள்ள சகலரும் "ஆவா" குழவுடன் தொடர்புடையவர்கள் என்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் கூறவில்லை என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.**

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ, இராணுவத்தில் தனக்கு மிகவும் பிடித்த அதிகாரியைக் கொண்டு "ஆவா" குழுவை உருவாக்கினார் என்று, தான் கூறியதாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். (இ-7)

# பிணை முறி மோசடிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க குழு நியமனம்

மத்திய வங்கி பிணை முறி மோசடிகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் கோப்குழுவின் விசாரணை அறிக்கைப் பரிந்துரைகள் அண்மையில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த அறிக்கை குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கும் நோக்கில் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, மூன்று சட்ட வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளார்.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல், அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி மற்றும் அரச சட்டத்தரணி ஒருவர் ஆகியோர் இந்தக்குழுவில் அங்கம் வகிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு எதிர்வரும் இரண்டு மூன்று நாட்களில் கூடி, கோப்குழு அறிக்கை குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவித்தார்.

அறிக்கையை ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி தெளிவுபடுத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கோப் குழுவிற்கு சாட்சியமளித்தவர்களிடம் மீளவும் விசாரணை நடத்தப்பட வேண்டுமென தீர்மானித்தால், அதற்காக சபாநாயகரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படும் என அவர் மேலும் வார இறுதி பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்தார். (இ-7)

# கொள்ளைக் கும்பலால் வழிநடத்தப்படும் அரசு

## ஜே.வி.பி.தலைவர் குற்றச்சாட்டு

நாட்டினதும், பொதுமக்களினதும் சொத்துக்களை கொள்ளையடிக்கும் கும்பலே இன்று இலங்கையின் ஆட்சி கவிழ்ப்பையும் ஆட்சியிலுள்ளவர்களை பாதுகாப்பதையும் மேற்கொண்டு வருவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செயலமர்வில் கலந்து கொண்ட அநுர குமாரதிஸாநாயக்க, இந்த புதிய கொள்ளைக் கும்பல், தம்மை பாதுகாத்துக் கொள்ள மனிதப் படுகொலைகளை செய்துள்ளதுடன், செய்யவும் தயாராகவும் இருப்பதாகவும் எச்சரித்துள்ளார்.

இதனால்இந்த முன்னணி குறித்து நாட்டு மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,கடந்த தேர்தல் காலங்களில் ஊழல் மோசடிக்காரர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதிகளும் நிறை வேற்றப்படவில்லை.

ஆனால் கொள்ளைக் கும்பலை பாதுகாக்கும் ஒரு கூட்டணியொன்று கட்டியெழுப்பப்பட்டு ள்ளது. 2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதிக்கு முன்னர் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு என்ன செய்வது என்பதே பேசுபொருளாக இருந்தது.

ஆனால் தற்போது புதிய ஊழல் மோசடிக்காரர்கள் தொடர்பான விவகாரம் பேசுபொருளாக மாறியுள்ளது. நாட்டு மக்களின் பல கோடி ரூபாய் நிதிகளை கொள்ளையடிக்கும் கும்பலொன்று எமது நாட்டில் தொடர்ச்சியாக இருந்துகொண்டுதான் இருக்கின்றது.

அரசியல்வாதிகளும், அதே போல் அரச அதிகாரிகளில் ஒரு சிலரும் மக்களின் பணத்தை கொள்ளையடிப் பதையே இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.


அதேபோல் இராணுவத்திலும் மோசடிக்காரர்கள் சிலர் இருக்கின்றனர். பொலிஸ் திணை க்களத்திலும், அதே போல் வர்த்தகர்கள் மத்தியிலும் ஊழல் மோசடிக்காரர்கள் சிறிய அளவில் இருக்கத்தான் செய்கின்றனர்.

இந்த ஊழல் மோசடிக் கும்பலே ஆட்சிக்கவிழ்ப்பை மேற்கொள்கின்றது. அதே போல் தமக்குத் தேவையான ஆட்சியை பாதுகாக்கவும் செய்கின்றது.

இந்த கொள்ளைக் கும்பல்களிடம் சட்டவிரோதமான ஆயுதங்கள் இருக்கின்றன. இந்த கொள்ளைக் கும்பலுக்கு பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்பும் இருக்கின்றது.

பதிவுசெய்யப்படாத வாகனங்கள் இருக்கின்றன. தமது ஊழல் மோசடிகளை மூடி மறைத்துக்கொள்வதற்காக இந்தக் கும்பல் பல படுகொலைகளையும் புரிந்திருக்கின்றது எனத் தெரிவித்தார். (இ-7)

# யோஷித ஆஸி செல்ல அனுமதி



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷ, அவுஸ்திரேலியா செல்ல விசா கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில் யோஷிதவுக்கு அவுஸ்திரேலியா செல்ல அனுமதிக்கப்படாமையினால் யோஷிதவின் இந்த விசா பிரச்சினை தொடர்ந்து அதிகம் பேசப்பட்ட ஒரு விடயமாக காணப்பட்டது.

இந்த நிலையில் யோஷிதவுக்கு விசா வழங்கப்பட வேண்டும் என பலர் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கடந்த வாரம் இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதரகம் யோஷிதவுக்கு விசா வழங்குவதற்கு தீர்மானித்துள்ளமையினால் யோஷித மிகவும் மகிழ்ச்சியில் உள்ளார் என குறிப்பிடப்படுகின்றது. யோஷித அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்கு தீவிர முயற்சி மேற்கொண்டமைக்கு வலுவான காரணங்கள் இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

யோஷித போலியான தகவல்களை சமர்ப்பித்து அவுஸ்திரேலியா விசா பெற்றுக் கொள்ள முயற்சித்தமையால் விசா முன்னர் மறுக்கப்பட்டிருந்தது.

கடந்த காலங்களில் கொள்ளையடித்த பெருந்தொகைப் பணத்தை வெளிநாடுகளில் முதலீடு செய்துள்ள ராஜபக்ஷ குடும்பம், அவ்வப்போது வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டு அதனூடாக பெற்றுக்கொண்ட பணத்தை நாட்டுக்கு கொண்டு வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## சு.க. உறுப்புரிமையை இழந்தார் ஜி.எல்.பீரிஸ்

முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை இழந்துவிட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எனும் புதிய கட்சியின் தலைவராக முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளதால் அவரது உறுப்புரிமை இயல்பாகவே பறிக்கப்படும் என இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(இ-7)

## போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையம் திடீர் சுற்றிவளைப்பு

போலி ஆவணங்கள் தயாரிக்கும் நிலையம் எம்பிலிபிட்டிய பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிபிட்டிய - பனாமுர வீதியிலுள்ள வீடொன்றிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை எம்பிலிபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## மின்சாரம் தாக்கி ஊழியர் உயிரிழப்பு

கெக்கிராவை நகரத்தில் அதிசக்தி வாய்ந்த மின் இணைப்பு கம்பத்தில் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த மின்சார சபை ஊழியர் ஒருவர், மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். குறித்த ஊழியர் மின்சாரம் தாக்கி கடுமையான பாதிப்புக்குள்ளான நிலையில் கெக்கிராவ மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டு,

மேலதிக சிகிச்சைகளுக்காக தம்புள்ள பெரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார். (இ-7)

## மண்சரிவு ஏற்படுமென மக்களுக்கு எச்சரிக்கை

இரத்தினபுரி, களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நிலச்சரிவு மற்றும் மலைகள் சரிவு ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

## வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை

தெற்கு அதிவேகப் பாதையில் பயணம் செய்யும் வாகன சாரதிகளுக்கு போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் தெற்கு பகுதியில் நிலவி வரும் மோசமான காலநிலையால், எதிர்வரும் சில தின ங்களுக்கு அவதானத்துடன் வாகனத்தை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அவதானத்துடன் வாகனத்தை செலுத்துவதன் மூலம் விபத்துக்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## வர்த்தக நிலையத்தில் ஆணின் சடலம் மீட்பு

பொதுமக்களின் தகவலுக்கமைய ஹட்டன் நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து ஆணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. ஹட்டன் டிக்கோயா நகரசபை பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்தே ஹட்டன் பொலிஸாரினால் நேற்று இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வழக்கொன்று தொடரப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற உத்தரவிற்கமைய மூடப்பட்டிருந்த குறித்த கடையிலிருந்தே மேற்படி சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.(இ-7)



# சிறுவர் அரங்கம்

## பனை மரமும் பச்சைக் கிளியும்

தெற்கு காரசேரி எனும் கரிசல்காட்டுப் பகுதியில், ஒரு பனைமரம் இருந்தது. அதன் உடல் கறுப்பாகவும் ஓலைகள் பச்சைப் பசேல் என்றும் இருந்ததால் அந்தப் பனைமரம் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது.

பலவிதமான பறவைகள் அந்தப் பனைமரத்துக்கு வந்து தங்கிச் செல்லும் என்றாலும் ஓர் அழகான பச்சைக்கிளி மட்டும் அந்தப் பனைமரத்துடன் பாசத்தோடு பழகியது.

இரை தேடிச்செல்லும் சமயங்கள் தவிர, மற்ற நேரங்களில் அந்தப் பச்சைக்கிளி அந்தப் பனைமரத்திலேயே தங்கிக் கொண்டது.

பனைமரமும் பச்சைக் கிளியும் மனந்திறந்து பேசி மகிழும். கிளி இரை தேடும் போது ஏற்படும் அனுபவங்களைப் பனைமரத்தோடு பகிர்ந்து கொள்ளும். அந்த



அனுபவங்கள் பனை மரத்தை மெய்சிலிர்க்கச் செய்யும்.

ஒருநாள் வேடன் ஒருவன் விரித்த வலையில் சிக்கவேண்டிய நிலையில், பச்சைக் கிளி அதிலிருந்து மயிரிழையில் தப்பித்து வந்தது. அந்த அனுபவத்தைக் கிளி சொல்லக் கேட்டதும் பனைமரம் பதறியது.

“கிளியே, கிளியே, உனக்கு ஏதாவது ஒன்று என்றால் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. இனிமேல் இரை தேடிச் செல்லும்போது கவனமாகப் போய் வரவேண்டும்” என்று ஆலோசனையும் சொன்னது பனைமரம்.

இரை தேடிச் செல்லும் போது கிடைக்கும் அழகிய பழங்களை கிளி பனைமரத்திற்கு கொண்டுவந்து கொடுக்கும். பனைமரமும் அந்தப் பழங்களை ஆசையோடு தின்று மகிழும். “”கடவுள், உன்னைப்போல எனக்கும் இறக்கைகள் கொடுத்திருந்தால் நானும் வானில் பறந்து வட்டமடிப்பேன்” என்ற தன்னுடைய ஆசையை கிளியிடம் அடிக்கடி பனைமரம் சொல்லும். தன் இனிய பதநீரை கிளிக்குத் தந்து மகிழும்.

ஒருநாள் கிளி இரை தேடிச் சென்றபோது தன் அணில் நண்பனை தன்னுடன் அழைத்து வந்து பனைமரத்திடம் அறிமுகம் செய்து வைத்தது. அணிலும் பனைமரமும் நீண்டநேரம் பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தன. தன்னிடமுள்ள இளம் நுங்குகளை அணிலுக்குத் தந்து மகிழ்ந்தது பனைமரம்.

அணிலும் நுங்கை ரசித்து ருசித்தது.

“ருசியான நுங்கை சுமக்கும் நீ உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவன். உன் உடல் கறுப்பு என்றாலும் உள்ளம் வெள்ளை” என்று புகழ்ந்தது அணில்.

அடிக்கடி வந்து தன்னைச் சந்தித்துச் செல்லும்படி அணிலிடம் கேட்டுக்கொள்ள அதுவும் சம்மதித்தது. பின்பு பனைமரத்திடமிருந்து பிரியாவிடை பெற்றது.

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2016 07

- 1492 - உலகின் மிகப் பழமையான விண்கல் மோதல் பிரான்சில் இடம்பெற்றது.
- 1665 - உலகின் பழமையானதும் இப்போதும் வெளிவரும்த லண்டன் கசெட் (The London Gazette) முதலாவது இதழ் வெளியானது.
- 1893 - கொலராடோ மாநிலத்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
- 1910 - உலகின் முதலாவது விமானத் தபால் பொதிச் சேவை ரைட் சகோதரர்களால் ஒகையோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1918 - மேற்கு சமோவாவில் பரவிய ஒரு வித நச்சு (வைரஸ்) நோய் காரணமாக 7,542 பேர் (20வீ மக்கள் தொகை) ஆண்டு முடிவிற்குள் இறந்தனர்.
- 1931 - மா வோ சே துங் சீன சோவியத் குடியரசை ஒக்டோபர் புரட்சியின் நினைவு நாளில் அறிவித்தார்.
- 1956 - சூயஸ் கால்வாய் பிரச்சினை: எகிப்தில் இருந்து உடனடியாக ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இஸ்ரேல் படைகளை வெளியேறுமாறு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் கேட்கப்பட்டது.
- 1983 - ஐக்கிய அமெரிக்காவின் செனட் கட்டடத்தில் குண்டு வெடித்தது.
- 1991 - மேஜிக் ஜான்சன் தாம் எச்.ஐ.வி. நுண்மத்தை பெற்றுள்ளதாக அறிவித்து என். பி. ஏ.-இல் இருந்து வெளியேறினார்.
- 1996 - நைஜீரிய விமானம் ஒன்று லாகோஸ் அருகே வீழ்ந்ததில் 143 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - அமெரிக்கப் பொருட்களின் விளம்பரங்களை அறிவிக்க ஈரான் தடை செய்தது.

### பிறப்புகள்

- 1728- ஜேம்ஸ் குக், ஆங்கிலேய நாடுகாண் பயணி, கடற்படை அலுவலர். (இ. 1779)
- 1858 - பிபின் சந்திர பால், இந்திய செயல் திறனாளர் . (இ. 1932)
- 1867 - மேரி க்யூரி போலந்து மற்றும் பிரஞ்சு வேதியியல் அறிஞர், நோபல் பரிசு பெற்றவர். (இ.1934)
- 1876 - சார்லி டவுன்செனட், ஆங்கிலேயத் துடுப்பாட்ட வீரர் . (இ. 1958)
- 1879 - லியோன் ட்ரொட்ஸ்கி, ரஷ்யப் புரட்சியாளர். (இ. 1940)
- 1888 - சி. வி. இராமன், இந்திய இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1970)
- 1913 - அல்பேர்ட் காம்யு - நோபல் பரிசு பெற்ற பிரஞ்சு எழுத்தாளர். (இ. 1960)
- 1929 - எரிக் காண்டல், நோபல் பரிசு பெற்ற ஆத்திரிய மருத்துவர்.
- 1954 - கமல்ஹாசன், தமிழ் நடிகர்.
- 1959 - சிறிநிவாசு, பாடகர்.
- 1969 - நந்திதா தாஸ், இந்திய நடிகர்.
- 1975 - வெங்கட் பிரபு, இந்தியத் திரைப்பட இயக்குநர்.
- 1980 - கார்த்திக், பாடகர்.
- 1980 - ஜேம்ஸ் பிராங்கிளின், நியூசிலாந்துத் துடுப்பாட்ட வீரர்.
- 1981 - அனுஷ்கா செட்டி, இந்திய நடிகை.

### இறப்புகள்

- 644 - உமறு இப்னு அல்-கத்தாப், இசுலாமியக் கலீபா. (பி. 590)
- 1862 - பகதுர்ஷா ஜஃபர், பேரரசர், விடுதலைப் போராட்ட வீரர்.
- 1913 - ஆல்ஃவிரடு அரசல் வாலேசு, ஆங்கில உயிரியலாளர் . (பி. 1823)
- 1947 - கோ. நடேசையர், இலங்கையின் மலையகப் பத்திரிகையாளர் . (பி. 1887)
- 1951 - என். சி. வசந்தகோகிலம், கருநாடக இசைக் கலைஞர்.
- 1962 - எலினோர் ரூசுவெல்ட், அமெரிக்க அரசியல்வாதி. (பி. 1884)
- 1993 - திருமுருக கிருபானந்த வாரியார், ஆன்மீகவாதி. (பி. 1906)
- 2000 - சி. சுப்பிரமணியம், இந்திய அரசியல்வாதி. (பி. 1910)
- 2011 - ஜோ பிரேசியர், அமெரிக்கக் குத்துச் சண்டை வீரர். (பி. 1944)

### சிறப்பு நாள்

- பெலரூஸ் - அக்டோபர் புரட்சி நாள். (1917)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 35 | 80 | 80 |
| தக்காளி | 80 | 45 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| கோவா | 60 | 45 | 80 | 80 |
| கரட் | 80 | 80 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 60 | 40 |
| புடோல் | 60 | 30 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 110 | 75 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 150 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 80 |
| பயற்றங்காய் | 180 | 200 | 120 | 160 |
| லீக்ஸ் | 140 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 160 | 100 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 20 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 170 | 200 | 160 |
| கத்தரித்தம்புள்ள | 50 | 30 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 500 | 30 | 30 |
| தேசிக்காய் | 550 | 20-40 | 600 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 40 | — | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | 160 | — | — | 200 |
| முள்ளங்கி | 60 | 35 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — |

# பாராளுமன்றம் அருகே கார்க்குண்டுத் தாக்குதல்



சோமாலியா நாட்டின் பாராளுமன்றம் அருகே அல்ஷபாப் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டு தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியாகினர்.


ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவில் மேற்கத்தேய நாடுகளின் ஆதரவுடன் நடைபெற்றுவரும் ஆட்சியை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் அல்ஷபாப் தீவிரவாதிகள், இங்கு பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் கென்யா, ஜிபோட்டி, உகண்டா, எதியோப்பியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கூட்டுப் படையினரை குறிவைத்தும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், வெளிநாட்டினர் அதிகமாக கூடும் பிரபல ஹோட்டல்களின்மீது தாக்குதல் நடத்தி, பலரை சுட்டுக் கொன்றும், சிலரை பிணைக் கைதியாக பிடித்து வைத் தும் அட்டூழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சோமாலியா நாட்டின் தலைநகரான மொகாடிஷு நகரில் உள்ள பாராளுமன்றம் அருகே அல்ஷபாப் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டு தாக்குதலில் இரு இராணுவத்தினர் பலியாகினர்.

வெடிகுண்டுகளால் நிரப்பப்பட்டிருந்த காரை ஓட்டி வந்த தீவிரவாதி, இராணுவ வாகனத்தின்மீது மோதி இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் அந்தச்செய்திகள் குறிப்பிடுகின்றன. (இ-7)

# டுபாயிலுள்ள தூதரகத்தில் காந்தி நினைவு மையம்



(டுபாய்)

டுபாயில் உள்ள இந்திய தூதரகத்தில் மகாத்மா காந்திக்கு நினைவு மையம் அமைக்க அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

டுபாயின் இந்தியாவிற்கான தூதரக அதிகாரி அனுராக் பூஷன் இதுகுறித்து கூறுகையில், காந்தியின் வாழ்க்கை மற்றும் அவரது பணிகளை உணர்த்தும் வகையில் இந்த கலாசார மையம் அமைக்கப்படவுள்ளது. டுபாய் அரசுடன் இணைந்து இந்த மையத்தை அமைப்பது மகிழ்ச்சிகரமாக உள்ளது. இந்த முதல் முயற்சி பெரிய அளவில் மாற்றத்தை கொண்டு வரும் என நம்புகிறேன்.

இலக்கியம், கலைகள் மற்றும் கதர் ஆடையை பரப்பும் அடையாளமாக இந்த மையம் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் நமது இளைய தலைமுறையினர் நமது தேசத் தந்தை குறித்து தெரிந்து கொள்ளவும் அவர்கள் ஊக்கம் பெறும் வகையில் இருக்கும் என்றார். (இ-7)

# தீவிரவாதிகளின் தாக்குதலில் 74 பொது மக்கள் உயிரிழப்பு



கிழக்கு அலெப்போவிலுள்ள அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த 8 நாட்களாக தீவிரவாதிகள் முன்னெடுத்த தாக்குதல்களில், 74 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அறிக்கை வெளியிட்டுள்ள சிரிய மனித உரிமை கண்காணிப்பகம், 'முன்னர் அல்-நுஸ்ரா முன்னணி என அறியப்பட்ட ஜப்ஹாட் ஃபதே அல்-ஷாம் தீவிரவாதிகள் மற்றும் சுதந்தியர சிரிய இராணுவ தீவிரவாதிகள், வடக்கு டமாஸ்கஸில் இருந்து சுமார் 355 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் தாக்குதல்களை முன்னெடுத்தனர். இதன்போது 25 சிறுவர்கள் உட்பட 74 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அலெப்போவை மீட்கும் படை நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தீவிரவாதிகளின் பிடியில் உள்ள ஆதிக்கப்பகுதி குறைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், அலெப்போ விரைவில் அரச படையினர் வசம் விழும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

# புகையிலை எதிர்ப்பு மாநாட்டை புறக்கணித்தது பாகிஸ்தான்


(இஸ்லாமாபாத்)

புகையிலைக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் பங்கேற்கமாட்டோம் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது. உலக சுகாதார அமைப்பு சார்பில் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் சர்வதேச புகையிலைக்கு எதிரான மாநாடு இந்தியாவில் இன்று முதல் 12 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இம் மாநாட்டில் 180 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இந்த சர்வதேச மாநாட்டில் பாகிஸ்தான் பங்கேற்காது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பாகிஸ்தான் சுகாதாரத்துறை அமைச்சர் சைரா அப்சல் தாரர் கூறுகையில் "இந்தியாவில் நடைபெறும் புகையிலைக்கு எதிரான மாநாடு முக்கியமானது. ஆனாலும் தற்போதைய சூழ்நிலையில் இந்த மார்நாட்டில் பாகிஸ்தான் பங்கேற்க சாத்தியமான சூழல் இல்லை. இருநாடுகளுக்கும் இடையே தற்போது ஏற்பட்டுள்ள பதற்றமான நிலையே இதற்கு காரணமாக உள்ளது.

மேலும் பாகிஸ்தான் தூதரக அதிகாரி இந்தியாவில் உளவு பார்த்ததாக கூறி இந்தியா வழக்கு பதிவு செய்து உள்ளது. எனவே இந்த பதற்றமான நிலையில் மாநாட்டில் பங்கேற்க முடியாது" என்றார். (இ-7)

# வானில் இருந்து எரிந்த நிலையில் மர்மப் பொருள் விழுந்ததால் பரபரப்பு




தமிழ்நாடு திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே வானில் இருந்து எரிந்த நிலையில் மர்மப்பொருள் விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. அது விமானத்தில் இருந்து விழுந்திருக்கலாம் என கருதப்படுகிறது. இது குறித்து தடயவியல்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் அருகே உள்ள கூத்தம்பூண்டி பஞ்சாயத்து மோதுப்பட்டி கிராமம் களத்துக்காட்டு தோட்டத்தை சேர்ந்தவர் வேலுச்சாமி. இவருடைய தோட்டத்தில் நேற்று முன்தினம் நண்பகல் வானத்தில் இருந்து எரிந்த நிலையில் மர்மப்பொருள் விழுந்தது. இதனால் அந்த பகுதியில் பலத்த சத்தம் கேட்டுள்ளது.

அதைக்கேட்டதும் அருகில் தோட்டத்து வீட்டில் இருந்த சிவகாமி என்பவர் ஓடிச் சென்று அந்த பொருளை பார்த்தார். அப்போது அந்த பொருள் பாதி எரிந்த நிலையில் இருந்தது. அலுமினிய உருளையில் வயர்கள் சுற்றி இருந்தது போல் அந்த பொருள் காணப்பட்டது. இதைப்பார்த்து ஆச்சரியமடைந்த சிவகாமி, அக்கம் பக்கத்தினரிடம் தெரிவிக்கவே, அவர்களும் ஆர்வத்துடன் வந்து அந்த பொருளை பார்த்தனர். பின்னர் இதுபற்றி கள்ளிமந்தையம்பொலிஸ் நிலையத்திற்கு சிவகாமி தகவல் கொடுத்தார். அதையடுத்து பொலிஸ் அதிகாரிகள் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று அந்த பொருளை கைப்பற்றி பார்வையிட்டனர்.

பின்னர் இதுகுறித்து மதுரையில் உள்ள தடய அறிவியல் துறைக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் மதுரை தடய அறிவியல் உதவி இயக்குநர் பாஸ்கரன் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்கு வந்து அந்த பொருளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். (இ-7)

# ஐ.நா.ஆலோசனைக் குழுவுக்கு இந்தியப் பிரதிநிதி தேர்வானார்



ஐ.நா சபையின் முக்கிய பதவிகளுக்கு, உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளை தேர்வு செய்யும் பணி தற்போது நடந்து வருகிறது.


சர்வதேச சட்ட ஆணைய உறுப்பினர்கள் தேர்வு கடந்த வியாழக்கிழமை நடந்தது. அதில் இந்தியாவின் இளம் சட்டத்தரணி அனிருதா ராஜ்புத் (வயது 33) தேர்வு செய்யப்பட்டார். இவர் அடுத்தாண்டு ஜனவரி முதல் 5 ஆண்டுகளுக்கு இப்பதவியில் இருப்பார். இந் நிலையில் ஐ.நா.வின் நிர்வாகம் மற்றும் பட்ஜெட் ஆலோசனை குழுவுக்கான உறுப்பினர் தேர்வும் நடந்தது.

இதில் இந்திய பிரதிநிதி முதல் நிலை செயலாளர் மகேஷ் குமார் தேர்வு செய்யப்பட்டார்.

இவருடன் ஜப்பான் மற்றும் சீன பிரதிநிதிகளும் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் அடுத்தாண்டு ஜனவரி முதல் 3 ஆண்டு காலம் பதவி வகிப்பர். ஐ.நாவின் நிர்வாகம் மற்றும் பட்ஜெட் சம்பந்தப்பட்ட விடயங்களை இவர்கள் முடிவு செய்வர். (இ-7)

# துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபர் ட்ரம்ப் அவசரமாக வெளியேற்றம்!

## அமெரிக்காவில் பெரும் பரபரப்பு






அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் பங்கேற்ற பிரசார கூட்டத்தில் துப்பாக்கியுடன் ஒரு மர்ம நபர் ஊடுருவியதால் இரகசிய பொலிஸ் அதிகாரிகள் அவரை அவசரமாக மேடையை விட்டு வெளியேற்றிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நாளை 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடக்கிறது.

இதில் ஜனநாயக கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டனும், குடியரசு கட்சி சார்பில் டொனால்டு ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

தேர்தலுக்கு இன்னும் ஒரு நாட்களே இருக்கும் நிலையில் நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்டுவரும் கருத்து கணிப்புக்களின் அடிப்படையில் ட்ரம்ப்பைவிட அவரை எதிர்த்து போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர். ஹிலாரி கிளின்டன் இரண்டு முதல் ஐந்து சதவீதம் வரை வெற்றிவாய்ப்பு மிக்கவராக காணப்படுகிறார்.

இந்த சரிவை சமன்செய்யும் வகையில் டொனால்ட் ட்ரம்ப் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.


இந்நிலையில், மேற்கு அமெரிக்காவில் உள்ள நெவேடா மாநிலத்தில் உள்ள ரெனோ நகரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பிரசார கூட்டத்தில் டொனால்ட் ட்ரம்ப் உரையாற்றிகொண்டிருந்தபோது திடீரென்று மேடையில் தோன்றிய இரகசிய பொலிஸார், டிரம்பின் உடலை கேடயம்போல் மறைத்தபடி, அவரை மேடைக்கு பின்புறமாக அழைத்து சென்றனர்.

அதற்குள், மேடைக்கு எதிரே இருந்த ஒருநபரை பொலிஸார் கைது செய்து அழைத்து சென்றனர். அந்த மர்ம நபர் துப்பாக்கியுடன் பிரசார கூட்டத்துக்கு வந்து ட்ரம்பை கொல்ல முயன் றதாக பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன. அந்த மர்ம நபர் கைது செய்யப்பட்டு வானில் ஏற்றிய பின்னர், சிரிப்புடன் மீண்டும் மேடையில் தோன்றிய டொனால்ட் டிரம்ப் தனது உயிரை பாதுகாத்தமைக்காக இரகசிய பொலிஸாருக்கு நன்றி தெரிவித்து விட்டு தனது பேச்சை தொடர்ந்தார்.

ட்ரம்ப்பை கொல்லும் நோக்கத்தில் வந்த அந்த மர்ம நபர் யார்? இந்த நோக்கத்தின் பின்னணி என்ன? என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பிரிட்டன் தீபோற்சவ விழாவில் ட்ரம்பின் கொடும்பாவி எரிப்பு





பிரிட்டன் நாட்டில் ஆண்டு தோறும் நடைபெறும் தீபோற்சவ (பான்ஃபயர்) விழாவில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் கொடும்பாவி எரிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டன் நாட்டு பாராளுமன்ற கட்டடத்தை கடந்த 1605 ஆம் ஆண்டு வெடி வைத்து தகர்க்கும் முயற்சி முறியடிக்கப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில் அந்நாட்டில் ஆண்டு தோறும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி 'பான்ஃபயர் நைட்' என்ற பெயரில் தீபோற்சவ விழா நடைபெறுவது வழக்கம். நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறும் இவ்விழாவில் இடம்பெறும் வாண வேடிக்கைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை கண்டு மக்கள் மகிழ்ச்சியடைவர்.

அவ்வகையில், தலைநகர் லண்டனில் இருந்து தெற்கே சுமார் 50 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஏடென்பிரிட்ஜ் பகுதியில் நடைபெற்ற தீபோற்சவ விழாவில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப்பின் 36 அடிஉயர கொடும்பாவி தீயிட்டு எரிக்கப்பட்டது. (இ-7)

# ட்ரம்ப் வெற்றி பெறுவதற்கான அனுமதி மறுக்கப்படலாம்

## விக்கிலீக்ஸ் நிறுவுநர் தெரிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்பிற்கு வெற்றி பெறுவதற்கான அனுமதி மறுக்கப்படுமென விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜுலியன் அசாஞ்ச் (Julian Assange) தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புத்திஜீவிகள் உள்ளிட்ட சர்வதேச ஆயுத நிறுவனங்கள், வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் ஆகியன ஹிலாரி கிளின்டன் வெற்றி பெறுவதையே விருப்புவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளின்டன் நிதியத்திற்கு நிதி அனுசரணை வழங்குகின்ற நிறுவனங்களே ஐ.எஸ். அமைப்பினருக்கு நிதி அனுசரணை வழங்குவதாகவும் ஜுலியன் அசாஞ்ச் தெரிவித்துள்ளார்.

இதில் குறிப்பாக சவுதி அரேபியா மற்றும் கட்டார் ஆகிய நாடுளின் அரசாங்கங்கள் கிளின்டன் நிதியத்திற்கு நிதி அனுசரணை வழங்குகின்ற அதேவேளை, ஐ.எஸ். அமைப்பினருக்கும் நிதி அனுசரணை வழங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


ஹிலாரி கிளின்டன் அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சராக இருந்த காலப்பகுதியில் சவுதி அரேபியாவுடன் 80 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளதாக விக்கிலீக்ஸ் நிறுவுநர் தெரிவித்துள்ளார்.



மேலும், லிபியாவில் இடம்பெற்ற ஆட்சிக்கவிழ்ப்பு மற்றும் போருக்கு ஹிலாரியே காரணமெனவும் அவர் கூறியுள்ளார்.

லண்டனின் ஈக்குவடோர் தூதரகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நேர்காணலில் கலந்துகொண்ட ஜுலியன் அசாஞ்ச் அங்கு 25 நிமிடங்கள் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ட்ரம்ப் வெற்றி பெறுவார் ஆரூடம் கூறிய குரங்கு



சீனாவின் புகழ்பெற்ற ஜோதிட குரங்கு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெறுவார் என ஆரூடம் கூறியுள்ளது. சீனாவில் உள்ள ஜீடா எனும் குரங்கு தீர்க்கதரிசனத்தின் அரசன் என அழைக்கப்படுகிறது. அப்படி அழைக்கப்படுவதற்கு ஏற்றவாறே பல்வேறு உலக நிகழ்வுகளை தனது ஞான திருஷ்டியால் முன்கூட்டியே கணித்து வெற்றியும் பெற்றுள்ளது இந்த குரங்கு.

ஐரோப்பிய உதைபந்தாட்ட தொடரில் போர்த்துக்கல்தான் வெற்றி பெறும் என முன் கூட்டியே கணித்ததால் பிரபலமடைந்த இந்த குரங்குக்கு சீனாவில் மட்டுமன்றி உலகளவிலும் ஏராளமான ரசிகர்கள் உள்ளனர்.

இந்நிலையில் தற்போது உலகமே ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குறித்து இந்த குரங்கு ஜோதிடம் கூறியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குறித்து கணிப்பதற்காக பிரத்தியேக மேடை அமைத்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அதன் ஒரு புறத்தில் ட்ரம்பின் உருவப்பொம்மையையும் மற்றொருபுறம் ஹிலாரியின் உருவப்பொம்மையையும் வைத்தனர். இதைத் தொடர்ந்து ஜோதிடக்குரங்கு மேடையில் ஏறியது. பின்னர் ஒரு கணம் கூட யோசிக்காமல் ட்ரம்பின் பொம்மையை கட்டிப்பிடித்து முத்தமிட்டு தேர்வு செய்தது. (இ-7)

# ஆவா குழுவுக்கும் இராணுவத்துக்கும் தொடர்பில்லை



## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கில் செயற்பட்டு வரும் ஆவா குழுவுடன் அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் தொடர்பு இருப்பதாக சிலர் முன்வைத்துள்ள கருத்துக்களை தான் முற்றாக நிராகரிப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.**

கடந்த 3 தசாப்தகாலம் நிலவிய பயங்கரவாதத்தை நாட்டில் முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர், எந்தவொரு அமைப்புக்கோ, தனிநபருக்கோ சமாதானத்துக்கு பங்கம் ஏற்படும் விதத்தில் செயற்படவோ, சட்டத்தை கையில் எடுக்கவோ இடமளிக்க மாட்டோம் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். குறித்த குழு உறுப்பினர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் மிக விரைவில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு அதிகூடிய தண்டனை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளனர்.

பியகம கோனவல களனி திஸ்ஸ மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

# வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்குச் சூழ்ச்சி

இலங்கை மத்திய வங்கியின் முறி மோசடி தொடர்பான கோப் குழு அறிக்கையை முதன்மைப்படுத்தி அடுத்த வருடத்துக்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்கான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளன.

கோப் அறிக்கையை காரணம் காட்டி வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் அரசாங்க தரப்பில் சிலருடன் இரகசியப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய வங்கி முறி மோசடி தொடர்பில் அரசாங்கத்தின் கருத்துக்கு எதிராகவுள்ள அரசாங்கம் சார்பான ஸ்ரீ ல.சு.க. மற்றும் ஐ.தே.க. என்பவற்றின் உறுப்பினர்களை இரகசியமான முறையில் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இம்மாதம் 10 ஆம் திகதி வரவு செலவுத்திட்ட யோசனை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதன் பின்னர், ஒரு மாத காலத்துக்கு விவாதம் இடம்பெறவுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் மீதான 3 ஆவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தலதாமாளிகை வீதி திறக்கப்படமாட்டாது

### அமைச்சர் கிரியெல்ல அறிவிப்பு

கண்டி ஸ்ரீதலதாமாளிகைக்கு முன்னாள் உள்ள பெருந்தெருவில் வாகனங்கள் பயணிப்பதற்கு மீண்டும் திறக்கப்படமாட்டாது என பெருந்தெருக்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இப்பாதை மூடப்பட்டதனால் ஏற்படும் வாகன நெரிசல் மற்றும் நகரின் மத்தியிலுள்ள போக்குவரத்து சிக்கல் என்பவற்றுக்கு மாற்றுவழித் திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்டி உயர் பாலிகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# அரச நிறுவனங்கள் தனியாரிடம் செல்லாது

இலாபம் ஈட்டித்தரும் அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு ஆதரவாக வாக்களிக்காது என அக்கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவர் ஷாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இலாபம் ஈட்டித்தரும் எந்தவொரு அரச நிறுவனத்தையும் தனியார்மயப்படுத்தக் கூடாது என கடந்த 31 ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு எதிரான யோசனைகளுக்கு நமது கட்சி ஆதரவளிக்காது.

நட்டமடைந்துள்ள நிறுவனங்களை இலாபம் அடையும் நிறுவனங்களாக மாற்றுவதே ஸ்ரீல.சு.கட்சியின் நோக்கமாகும். அதேபோன்று, அதிக நட்டம் அடைந்துள்ள நிறுவனங்களை தனியாருடன் இணைந்து இலாபம் உழைக்கும் நிறுவனமாக மாற்றுவதில் தவறில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தொடரும் சித்திரவதைகள் சிக்கலில் சட்டமா அதிபர்

(கொழும்பு)

இலங்கையில் சித்திரவதைகள் மற்றும் முறையற்ற கொடுமையான மனிதாபிமானமற்ற செயற்பாடுகளுக்கு எதிராக, சட்டமா அதிபரும் பொலிஸ்மா அதிபரும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சித்திரவதைகளுக்கு எதிரான தமது ஐந்தாவது மீளாய்வு அறிக்கையிலேயே மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ஒருவர் காணாமல் போனமை தொடர்பில் தமது ஆணைக்குழு, பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தபோதும் எவ்வித முன்னேற்ற அறிக்கைகளையும் பொலிஸ்மா அதிபர் தரவில்லை.

இந்தநிலையில் சட்டமா அதிபர் திணைக்களமும் சித்திரவதைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகைகள் குறித்த அறிக்கையை தமது ஆணைக்குழுவுக்கு வழங்கவில்லை என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தமக்கு கிடைத்த தகவல்களின்படி கடந்த மே மாதம் வரையில் குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்படாத 29 பேர் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சில வழக்குகள் 15 வருடங்களாக நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தநிலையில் நீதித்துறையில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் வெற்றிடம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் ஏற்பட்டுள்ள தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் வெற்றிடங்கள் என்பன சட்ட ஏற்பாடுகளை பாதித்துள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை' தடுப்பில் இருந்து மரணமானவர்கள் பலர் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தமது மீளாய்வு அறிக்கையில் குற்றம் சுமத்தியுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## புரிந்ததாகக் காட்டிக் கொள்ளலாமா?

மற்றவர்களைப் பேசவே விடாமல் செய்பவர்கள் ஓர் இரகம்.

மற்றவர்கள் சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்லி விடாமல், ஊம் ஊம் என்று அவசர அவசரமாகத் தலையாட்டி, நான் புரிந்து கொண்டு விட்டேன், இதற்கு மேல் நீ பேசாதே, என்று சொல்லாமல் சொல்பவர்கள் இன்னோர் இரகம்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு புரிந்த மாதிரிக் காட்டிக் கொண்டு பின்னர், காரியம் என்றதும் பேய் முழி முழிப்பவர்கள் மோசமான மூன்றாவது இரகம்.

எவரையுமே நன்கு பேச அனுமதிக்க வேண்டும். சிலருக்கு எதையும் ஆணித்தரமாகச் சொல்லிப் புரியவைக்கும் ஆற்றல் இருக்கும். சிலருக்கு எதையும் சுவைபடச் சொல்லி மனதில் பதிய வைக்கும் திறமை இருக்கும். சிலரோ அரை குறையாகச் சொல்லித் தாங்களும் குழம்பிப் பிறரையும் குழப்புவார்கள்.

இந்த மூன்றாவது இரகத்தினர் நம்மை ஆள்பவர்களாகவோ, நம்மைச் சுற்றி வாழ்பவர்களாகவோ இருந்து விட்டால் நம் பாடு கஷ்டம் தான்! என்ன செய்வது? ஆனாலும் சமாளிக்க வேண்டுமே!

எந்த ஒரு விடயத்தையும் நாம் தெளிவாக–கிளைச் சந்தேகங்கள் கூட இன்றிப்–புரிந்து கொள்வது அவசியம். இந்த விடயத்தில் நாம் குறிப்பாக இருந்தால் நமக்கு ஏமாளிப்பட்டமோ அசட்டுப் பட்டமோ கிடைக்காது. எவரிடமும் திட்டு வாங்க வேண்டிய அவமானப்பட வேண்டிய- அவசியமும் ஏற்படாது.

சில சமயம் நாம் வேறு சிந்தனையில் இருப்போம். அல்லது சுற்றுப்புறச் சூழ் நிலையில் ஏகப்பட்ட இரைச்சலாக இருக்கும். பஸ்சில் பயணம் செய்து கொண்டிருப்போம். சக பயணியோ தொண தொண என்பார். சிலரோ கோயில் மாடு மாதிரி இவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டியபடி வருவார்கள். என்ன கேட்டாலும் வேறு நினைப்பில் சரி சரி என்றும் ஆமாம் என்று சொல்லி வைப்பார்கள். அவர் ஏதாவது விபரீதமாகப் பேசியிருந்தாலோ ஓர் ஐந்நூறு ரூபாய் கடன் கேட்டிருந்தாலோ கூட சரிவரக் கேட்டுக் கொள்ளாமல் தலையாட்டியிருப்போம். இது சரியான செயலல்ல!

சரியாகக் கேட்கவில்லையா?

சாரி, ஒரே சத்தம் , திரும்பச் சொல்லுங்க என்று கேட்க வேண்டும்.

வேறு நினைப்பில் இருந்தோமா?

தப்பா நினைக்காதீங்க , எங்கே திரும்பச் சொல்லுங்க ? என்று கேட்கலாம்.

தெளிவாகச் சொல்லவில்லையா?

கொஞ்சம் புரியும் படி சொல்லுங்க

வேகமாகப் பேசினாரா?

நிறுத்தி நிதானமாகச் சொல்லுங்க

ஆக, புரியும் வரை விடக் கூடாது. திரும்ப திரும்பக் கேட்பதில் தயங்கவோ வெட்கப்படக் கூடாது. ஆனால் புரியாததை –கேட்காததைப் புரிந்து கொண்டதாகவும் கேட்டதாகவும் காட்டிக் கொள்ளும் நடிப்பு வேண்டாம் இது உதவாது , மாறாக உபத்திரவம் தான்!

**லேனாதமிழ்வாணன்**

# க.பொ.த. (சா/த) பரீட்சை-2016

## விஞ்ஞானம் மாதிரி வினாத்தாள்


பகுதி -1

நேரம்:- 1 மணித்தியாலம்

**கவனிக்க வேண்டியது : எல்லா வினாக்களுக்கும் விடை தருக. 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்ற விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**


*(04.11.2016 அன்று வெளியான விஞ்ஞானம் பகுதி I ஒன்றின் மிகுதி )*

21) வெண்குருதி சிறுதுணிக்கையின் இரண்டு வகைகளை உருவில் காணலாம். A, B என்பவை முறையே இங்கு




(1) இயோசிநாடி, நிணநீர்க்குழியம்.
(2) நடுநிலைநாடி, ஒற்றைக்குழியம்.
(3) ஒற்றைக்குழியம், நிணநீர்க்குழியம்.
(4) நடுநிலைநாடி, மூலநாடி

22) பல்வேறு உற்பத்திச் செயன்முறைகள் சிலவற்றுக்கான உதாரணங்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.
A - கறுவா எண்ணெய் பிரித்தெடுப்பு.
B - கடல் நீரிலிருந்து உப்பு உற்பத்தி.
C - சுண்ணாம்புக்கல்லைப் பயன்படுத்தி சீமெந்து தயாரித்தல்.
இங்கு கலவையின் கூறுகளை வேறுபடுத்துவதற்கான நுட்பங் சந்தர்ப்பம்/சந்தர்ப்பங்கள்
(1) A மட்டும். (2) B மட்டும்.
(3) A, B மட்டும். (4) A, C மட்டும்.





23) சுற்றில் ஆளி S ஐ மூடும் போது (ON) சுற்றின் சமானத்தடை
(1) 6 Ω (2) 4 Ω
(3) 3 Ω (4) 2 Ω

24) வாய்க்குழியில் ஆரம்பித்து களம், இரைப்பை, முன்சிறு குடல் வரை உணவு செல்லும்போது உணவு சமிபாடு அடைவதற்கு ஒவ்வொரு இடங்களிலும் உள்ள ஊடகங்களின் pH இன் பெறுமானம் வேறுபடுகின்றது. வாய்க்குழியிலிருந்து pH வேறுபடும் சரியான ஒழுங்கு முறைகள்
(1) அமிலம், நடுநிலை, காரம், அமிலம்
(2) நடுநிலை, நடுநிலை, அமிலம், காரம்
(3) காரம், நடுநிலை, அமிலம், நடுநிலை,
(4) காரம், காரம், அமிலம், காரம்

25) $xAl + yHCl \longrightarrow zAlCl_3 + 3H_2$ மேற்படி இரசாயனத் தாக்கத்தில் x, y, z ஆகியவற்றின் பெறுமானம் பின்வருவனவற்றுள் எது?
(1) 2,3, 6 (2) 2, 6, 3
(3) 3, 6, 2 (4) 2, 6, 2

26) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு புள்ளி C இல் தொங்கவிடப்பட்டுள்ள இலேசான கோல் சமநிலையில் உள்ளது.
இச்சந்தர்ப்பத்தில் W இன் பெறுமானம் யாது?





(1) 25 N (2) 50 N
(3) 75 N (4) 100 N

27) பேரிராச்சிய மட்டத்திற்கு ஏற்ப அங்கிகளை சரியாக வகைப்படுத்திக் காட்டுவது எது?
(1) பங்கசு, பிளான்ரே (தாவரம்), அனிமாலியா (விலங்கு)
(2) பற்றீரியா, புரோடோசோவா, அல்கா
(3) இயூக்கரியா, ஆக்கியா, பற்றீரியா
(4) பற்றீரியா, சயனோபற்றீரியா, பங்கசு

28) 80 g சோடியம் ஐதரொட்சைட்டு 360 g நீரில் கரைத்து கரைசல் தயாரிக்கப்பட்டது. இக்கரைசலில் சோடியம் ஐதரொட்சைட்டின் மூல் பின்னப் பெறுமானம் எவ்வளவு?
(Na = 23, O = 16, H = 1)
(1) 1/11 (2) 2/11
(3) 2/9 (4) 1/4

29) உருவில் சீராக்கும்பாலம் காட்டப்பட்டுள்ளது. இதனால் கிடைக்கும் பயப்பு அலையின வடிவத்தைக் காட்டும் சரியான வரைபு எது?







30) மாதவிடாய்ச் சக்கரத்தில் சூலகத்தினுள் நிகழும் மாற்றங்களைக் குறிக்கும் அவத்தைகள் அடங்கிய தேர்வாக அமைவது.
(1) மாதவிடாய் அவத்தை, பெருக்கல் அவத்தை
(2) புடைப்பு அவத்தை, சுரப்பு அவத்தை
(3) புடைப்பு அவத்தை, இலுயூற்றியல் அவத்தை
(4) பெருக்கல் அவத்தை, சுரப்பு அவத்தை

31) நற்போசணையாக்கம் அடைந்த நீர் நிலையிலிருந்து வெளியேற்றப்படும் வாயு எது?
(1) ஐதரசன் சல்பைட்டு (2) காபனீரொட்சைட்டு
(3) நைதரசன் (4) ஈலியம்


32) சூழல் மாசாக்கம் காரணமாக ஏற்படும் பாதிப்புகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - நீர்வாழ் அங்கிகள் அழிவடையும்.
B - சுண்ணக்கல் போன்ற பாறைகள் கரைந்து செல்லும்.
C - வளிமண்டலத்தில் வாயுக்களின் சதவீதம் மாறும்.
D - நற்போசணையாக்கம் ஏற்படும்.
இவற்றில் அமில மழையினால் ஏற்படும் பாதிப்புகள் ஆவன.
(1) A,B மட்டும். (2) B,C மட்டும்.
(3) A,B,C மட்டும். (4) A,B,C,D எல்லாம்.

33) உயிர்ச் சடப்பொருளில் பிரதான உயிர் மூலக்கூறுகள் யாவற்றிலும் உள்ளடங்கியுள்ள மூலகங்கள்
(1) காபன், ஐதரசன், நைதரசன் (2) காபன், ஐதரசன், ஒட்சிசன்
(3) ஐதரசன், ஒட்சிசன், பொசுபரசு (4) ஐதரசன், ஒட்சிசன், நைதரசன்


34) $1 \text{ mol dm}^{-3}$ சோடியம் ஐதரொட்சைட்டின் $500\text{cm}^3$ கரைசலைத் தயாரித்துக் கொள்வதற்கு தேவையான சோடியம் ஐதரொட்சைட்டின் திணிவு யாது?
(Na = 23, O = 16, H = 1)
(1) 10 g (2) 20g
(3) 30 g (4) 40g

35) இழை மின்குமிழில் 100 W, 230 V எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது வீட்டு மின்சுற்றுடன் இணைக்கப்பட்டால் இதனூடாகப் பாயும் மின்னோட்டம் எவ்வளவு?
(1) 0.34 A ஆகும். (2) 0.43 A ஆகும்.
(3) 0.51 A ஆகும். (4) 2.3 A ஆகும்.


36) உருவில் தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப உலோகக் குற்றியை நீரில் அமிழ்த்தியபோது விற்றராசின் வாசிப்பு யாது?
(1) 2N
(2) 4N
(3) 6N
(4) 8N




37) உருவில் காட்டப்பட்டுள்ளவாறு பொபினைச் சுற்றி அதிக எண்ணிக்கையில் காவலிடப்பட்ட செப்புக் கம்பி சுற்றப்பட்டுள்ளது. செப்புக் கம்பியின் இரு முனைகளிலும் நியோன் மின்குமிழ் பொருத்தப்பட்டுள்ளது. வலிமை மிக்க காந்தச் சட்டகம் சுருளின் மத்தியில் உள்ள துளையினூடாக வேகமாக மேல், கீழாக அசைக்கப்பட்டது. இது தொடர்பான சில கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - காந்தத்தை வேகமாக சுருளினூடாக அசைக்கும் போது நியோன் மின்குமிழ் கணப்பொழுதில் ஒளிர்ந்தது.
B - காந்தத்தை சுருளினுள் வைக்கும்போது தொடர்ச்சியாக நியோன் மின்குமிழ் ஒளிர்ந்தது.
C - காந்தத்தை சுருளில் இருந்து வேகமாக வெளிநோக்கி அசைக்கும்போது நியோன் மின்குமிழ் உடனடியாக ஒளிர்ந்தது. மேற்குறித்த கூற்றுகளுள் சரியானது / சரியானவை,
(1) A மட்டும். (2) B மட்டும்.
(3) A, B மட்டும். (4) A, C மட்டும்.




38) கீழே தரப்பட்டுள்ள சோதனைக் குழாய்களில் உள்ள பதார்த்தங்களை சம அளவான நேரம் வைத்து துருப்பிடிக்கும் வீதம் அறிய சோதிக்கப்பட்டது.





துருப்பிடிக்கும் வீதம் குறையும் ஒழுங்கு
(1) A, B, C (2) B, A, C (3) C, B, A (4) B, C, A

39) சோடியம் அணுவொன்றின் திணிவு $3.819 \times 10^{-23}$ g ஆகும். அணுத்திணிவு அலகின் பெறுமானம் $1.67 \times 10^{-24}$ g ஆகும். சோடியத்தின் சார் அணுத்திணிவு

(1) $\dfrac{1.67 \times 10^{-24}\,g}{3.819 \times 10^{-23}\,g}$ (2) $\dfrac{3.819 \times 10^{-23}\,g}{1.67 \times 10^{-24}\,g}$

(3) $\dfrac{1.67 \times 10^{-24}\,g}{3.819 \times 10^{-23}\,g \times \frac{1}{12}}$ (4) $\dfrac{3.819 \times 10^{-23}\,g}{1.67 \times 10^{-24}\,g \times \frac{1}{12}}$

40) நேர்கோட்டுப் பாதையில் பயணிக்கும் பொருளொன்றின் இயக்கத்தின் முதல் 60 செக்கனில் அவதானித்துப் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய வேக (v) - நேர -(t) வரைபு வரைபுபடுத்தப்பட்டது. இது தொடர்பான பின்வரும் கூற்றுகளை அவதானியுங்கள்.
A - முதல் 30 செக்கனில் பொருள் சீரான அமர்முடுகலுடன் பயணித்துள்ளது.
B - முதல் 60 செக்கனில் பொருள் மீது சீரான விசை தொழிற்பட்டுள்ளது.
C - t = 45 s இல் பொருளின் வேகம் 4.5 $ms^{-1}$ ஆகும்.
வழங்கப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப சரியானது/சரியானவை?
(1) A மட்டும்.
(2) B மட்டும்.
(3) A, C மட்டும்.
(4) B, C மட்டும்.




(16 ஆம் பக்கம் பார்க்க)

# விஞ்ஞானம்


## பகுதி -11

நேரம்:-
3 மணித்தியாலம்

கவனிக்க வேண்டியவை
பகுதி A யின் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.
பகுதி B யில் மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.

### பகுதி A - கட்டமைப்பு வினாக்கள்

1. (A) சூழற்றொகுதியொன்றில் ஒவ்வொரு போசணை மட்டத்தில் அங்கிகளின் எண்ணிக்கை. உயிர்த்திணிவு. சக்தி ஆகியவற்றுடன் சக்தியுடன் தொடர்பான கூம்பகங்கள் மூன்றைக் கீழே காணலாம்.




(i) இங்கு Y, Z ஆகிய கூம்பகங்களைப் பெயரிடுக.
Y - .............................. Z - ..............................

(ii) X கூம்பகத்தில் இடைவெளி (a) இற்குரிய பெறுமானம் எவ்வளவு?
..............................

(iii) தரப்பட்ட கூம்பகங்களில் தலைகீழான கூம்பக வடிவிலும் காணப்படக்கூடிய கூம்பகம் எது / எவை?
..............................


(iv) மேலே விபரிக்கப்பட்ட போசணை மட்டத்திற்குப் பொருத்தமான நான்கு இணைப்புக் கொண்ட உணவுச் சங்கிலியொன்றை எழுதுக.

(v) மேற்குறித்த சூழலுக்கு பாரவுலோகம் சேர்ந்ததாயின் எந்த அங்கியில் அதிகளவு செறிவு காணப்படும்?

(B) இலங்கையில் குறித்த மாகாணமொன்றில் சில வருடங்களாக சிறுநீரக நோய் பரவுவது தொடர்பான சில தகவல்களை அருகிலுள்ள அட்டவணையில் காணலாம்.


| வருடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2011 | 250 |
| 2012 | 600 |
| 2013 | 750 |
| 2014 | 2000 |
| 2015 | 5000 |

(i) வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பருமட்டான வரைபை வரைக.




(ii) தரப்பட்ட தகவல்களுக்கமைய சிறுநீரக நோயாளிகளின் பரம்பல் தொடர்பாக எதிர்வுகூறக் கூடியது யாது?
..............................

(C) உயிர்க்கோளத்தில் காபன் மூலகம் சுழற்சியடையும் முறையை விளக்கும் பருமட்டான அமைப்பு கீழே காணப்படுகிறது.




(i) இங்கு X எனக் குறிப்பிடப்பட்ட செயன்முறை யாது?
..............................

(ii) செயன்முறைX, y ஆகியவற்றுக்கிடையில் காணப்படும் செயன்முறை வேறுபாட்டைக் குறிப்பிடுக. ..............................

(D) கொழும்பு நகரில் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்ட P, Q என்னும் காலை உணவு வேளைகள் இரண்டு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| P உணவு வேளை | பிரதான உணவு | உணவு உற்பத்தி செய்யப்பட்ட இடத்திற்கான தூரம் (மைல்) |
|---|---|---|
| சிவப்பு அரிசிச் சோறு | சிவப்பு அரிசி | 2 (சொந்த வயல்) |
| கிழங்குச் சொதி | கிழங்கு | 90 (நுவரெலியா) |
| தேங்காய்ச் சம்பல் | தேங்காய் | 80 (அனுராதபுரம்) |
| பப்பாசி | பப்பாசி | 0 (செந்த வீட்டுத்தோட்டம்) |


| Q உணவு வேளை | பிரதான உணவு | உணவு உற்பத்தி செய்யப்பட்ட இடத்திற்கான தூரம் (மைல்) |
|---|---|---|
| பாஸ்மதி அரிசிச் சோறு | அரிசி | 1720 (பாக்கிஸ்தான்) |
| பருப்புக் கறி | பருப்பு | 925 (இந்தியா) |
| வெங்காயச் சம்பல் | வெங்காயம் | 925 (இந்தியா) |
| அப்பிள் | அப்பிள் | 4000 (அவுஸ்திரோலியா) |

(i) P, Q உணவு வேளைகளுக்கான உணவின் மைல் பெறுமானத்தைக் கணிக்க.
..............................

(ii) (a) மேற்குறித்த உணவின் மைல் பெறுமானத்திற்கு ஏற்ப நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கியமான உணவு வேளை P, Q என்பவற்றுள் எது எனக் குறிப்பிடுக.
..............................

(b) உமது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக?

2. (A) சுவாசத்தின் போது காபனீரொட்சைட்டு வெளியேற்றப்படுவதைக் காட்டுவதற்கு அமைக்கப்பட்ட உபகரண அமைப்பை உருவில் காணலாம்.




(i) இவ் உபகரணம் செயற்படுவதற்கு முனை X இல் தொடுக்க வேண்டிய உபகரணத்தைப் பெயரிடுக. ..............................

(ii) மேலே வினா (i) இல் குறிப்பிடப்பட்ட உபகரண அமைப்பில் உள்ள தவறு காரணமாக அது முறையாகச் செயற்படவில்லை. அத்தவறைக் குறிப்பிடுக.
..............................

(iii) தவறுகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் இவ்வமைப்பில் பின்வரும் ஒவ்வொன்றும் பயன்படுத்தப்பட்டுள்ளமைக்கான நோக்கத்தைக் குறிப்பிடுக.

(a) பொற்றாசியம் ஐதரொட்சைட்டுக் கரைசல்
..............................

(b) குடுவை "B" இல் நிறமற்ற சுண்ணாம்புக் கரைசல்
..............................

(c) குடுவை "D" இல் நிறமற்ற சுண்ணாம்புக் கரைசல்
..............................

(B) கீழே முள்ளந்தண்டற்ற விலங்குகள் கொண்டுள்ள சில இயல்புகள் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| P | கல்சியம் காபனேற்றால் ஆக்கப்பட்ட ஒரு கவசம் காணப்படும் |
| Q | மூட்டுக்களைக் கொண்ட பாதம் |
| R | கூரான முட்களைக் கொண்ட உடற்கவசம் காணப்படும். |
| S | கலப்படை இரண்டால் ஆன உடல் உண்டு. |
| T | கைற்றினால் ஆன புறவன்கூடு காணப்படுகிறது, |

(i) மேலே தரப்பட்டுள்ள இயல்புகளுள் வெட்டுக்கிளி கொண்டுள்ள இயல்புகளைக் காட்டும் ஆங்கில எழுத்தை எழுதுக.
..............................

(ii) மேலே தரப்பட்டுள்ள இயல்புகளில் வெட்டுக்கிளி கொண்டிராத இயல்புகளைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களைக் குறிப்பிட்டு அவ்வியல்புகளைக் கொண்டுள்ள முள்ளந்தண்டற்ற விலங்குக் கணங்களைப் பெயரிடுக.

| எழுத்து | உரிய இயல்புகளைக் காட்டும் முள்ளந்தண்டற்ற விலங்கு கணம் |
|---|---|
| | |
| | |
| | |

(C) கலத்தில் காணப்படும் புன்னங்கங்கள் சிலவற்றின் இலத்திரன் நுணுக்குக் காட்டியினூடான உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



X Y Z

மேலே தரப்பட்டுள்ள உருக்களை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| புன்னங்கம் | புன்னங்கத்தின் பெயர் | பிரதான தொழில் |
|---|---|---|
| X | | பதார்த்தங்களைச் சுரத்தல் கடத்துதல் |
| Y | | |
| Z | | |

3. (A) தாக்க வீதத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதற்கு கல்சியம் காபனேற்று, ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்தை பயன்படுத்தி செய்யப்பட்ட சோதனையின் தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| அமைப்பு | கல்சியம் காபனேற்றின் இயல்பும் அளவும் | ஐதான ஐதரோகுளோரிக் கமிலத்தின் செறிவு | வெப்பநிலை |
|---|---|---|---|
| A | தூள் 50 g | 1 mol dm$^{-3}$ | 30°C |
| B | தூள் 50 g | 2 mol dm$^{-3}$ | 30°C |
| C | துண்டு 50 g | 2 mol dm$^{-3}$ | 30°C |
| D | தூள் 50 g | 2 mol dm$^{-3}$ | 60°C |

(i) மேற்குறித்த தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| | அமைப்புச் சோடி | தாக்க வீதத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணி |
|---|---|---|
| (a) | A யும் B யும் | |
| (b) | B யும் C யும் | |
| (c) | B யும் D யும் | |

(ii) கல்சியம் காபனேற்று, ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்துக்கிடையிலான தாக்கத்தின்போது தோன்றும் வாயு யாது?
..............................

(iii) மேலே வினா (ii) இல் குறிப்பிட்ட வாயுவை இனங்காண உதவும் சோதனையைக் குறிப்பிடுக.
..............................

(மிகுதி நாளை வெளிவரும்)

# இரண்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் கலைப்பு!

(கொழும்பு)

இராணுவ புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் கடந்த வாரம் விலக்கப்பட்டமையை அடுத்து, இராணுவ புலனாய்வு பிரிவின் கீழ் இயங்கி வந்த இரண்டு பிரிவுகள் கலைக்கப்பட்டுள்ளன. இராணுவ புலனாய்வுத்துறையின் பணிப்பாளர் நிலையில் இருந்து பிரிகேடியர் சுரேஸ் சாலி நீக்கப்பட்டு, பிரிகேடியர் விஜேந்திரா குணதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் சாலியின் கீழ் இயங்கி வந்த இரண்டு பிரிவுகளே கலைக்கப்பட்டுள்ளன.

சுரேஸ் சாலிக்கு பாதுகாப்பு தரப்பில் வெளியிடப்பட்ட நம்பிக்கையின்மையே அவரின் பதவி நீக்கத்துக்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலி முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயவுக்கு நெருங்கிய அதிகாரி என்பதுடன் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவமே அவரை பதவி நீக்க காரணமாக அமைந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை புதிய பணிப்பாளர் குணதிலக்க, பீல்ட் மார்ஷல், அமைச்சர் சரத் பொன்சேகாவின் நெருங்கிய அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அரசாங்கத்திடம் நிவாரணம் கோரும் பால்மா இறக்குமதி நிறுவனங்கள்

பால்மா இறக்குமதி நிறுவனங்கள் அரசாங்கத்திடம் நிவாரணம் வழங்குமாறு கோரியுள்ளன.

பால்மாவிற்காக வற் வரி அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்படும் பால்மா ஒரு கிலோவின் செலவு 106 ரூபாவினால் உயர்வடைந்துள்ளது.

எனவே இந்தத்தொகையை அரசாங்கம் நிவாரணமாக வழங்க வேண்டுமென பால்மா இறக்குமதி நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரியுள்ளன.

இலங்கையில் பால்மா இறக்குமதி செய்யும் ஐந்து பிரதான நிறுவனங்கள் காணப்படுகின்றன. வற் வரி அதிகரிப்பிற்கு அமைய பால்மா விலையை உயர்த்துவது குறித்து இன்னும் இறக்குமதி நிறுவனங்கள் தீர்மானிக்கப்படவில்லை.

எனினும் நிறுவனங்கள் எதிர்நோக்கியுள்ள நெருக்கடி நிலைமை குறித்து நிதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பால்மா இறக்குமதியாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் எவ்வித சலுகையும் வழங்காவிட்டால் பால்மாவின் சில்லறை விலையில் மாற்றம் ஏற்படும் எனவும் இது வரையில் பால் மாவிற்கு வற் வரி விதிக்கப்படவில்லை.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால்மாவிற்கு 135 ரூபா சுங்க வரி மட்டுமே அறவீடு செய்யப்பட்டது.

எனினும் தற்போது 15 வீத வற் வரியும் அறவீடு செய்யப்பட உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)



புங்குடுதீவு கண்ணகைபுரம் சைவ இளைஞர் கழக (கனடா) நிதி அனுசரணையுடன் 2016 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை புங்குடுதீவு உலக மைய கல்விக் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# மலையைப் பாதுகாக்கக்கோரி உண்ணாவிரதம்

### சிங்களே ஜாதிக பலமுலுவ எச்சரிக்கை



(கொழும்பு)

சிவனொளிபாத மலையை பாதுகாப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காது போனால் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடப் போவதாக சிங்களே ஜாதிக பலமுலுவ அமைப்பு தெரிவித்துள்ளது.

சிவனொளிபாத மலை பாதுகாப்பை வலியுறுத்தி கடந்த வெள்ளிக்கிழமை கண்டியிலிருந்து ஆரம்பமாகிய பாதயாத்திரை நேற்று நல்லதண்ணியில் முடிவடைந்த நிலையில் அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் அரம்பேபொல ரதனசார தேரர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)


## இந்த ஆண்டு இறுதிக்குள் கல்வி நிர்வாக சேவைக்கு 852 பேர் இணைக்கப்படுவர்

இவ்வருடம் முடிவதற்கு முன்னர் கல்வி நிர்வாக சேவைக்கு தகுதியான 852 பேரை இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளிலிருந்து 219 பேரும், மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 515 பேரும், சிரேஷ்ட மற்றும் தகுதி அடிப்படையில் 118 பேரும் இவ்வாறு தெரிவு செய்யப்படவுள்ளனர். திறந்த போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 892

சசிக்குமார்




வசந்தகுமார்




சிந்து




சாயிதா




துவா



ரோகினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.






படங்கள்:-பொ.சோபிகா

முரளி நவரத்தினகஜன் எழுதிய "நில அளவை நூல்வெளியீட்டு விழா நேற்று முன்தினம் புன்னாலைக் கட்டுவன் குளத்தடி நச்சிமார் கோவிலடி ஸ்ரீதுர்க்கா பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

ஓய்வு நிலை வைத்தியர் ஆ.திரு நாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மடு கல்வி வலய உதவிக்கல்வி பணிப்பாளர் அ.சுபாஸ்கரன், வலி.தெற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ரி.பிரகாஸ், கௌரவ விருந்தினராக யாழ்.வயாவிளான் மத்திய கல்லூரி பகுதித் தலைவர் சி.பாலகிருஸ்ணன், இளவாலை கன்னியர்மட மகா வித்தியாலய ஆசிரியர் தே.திரு முருகராஜன், வயாவிளான் மத்திய கல்லூரி ஆசிரியர் ரி.முருகநிரோஜன், கலந்து கொண்டதுடன் நூல் வெளியீட்டுரையை யாழ் தேசிய கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் நா.அம்பிகைபாகன் நிகழ்த்தியிருந்தார்.







யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் மற்றும் வசந்தம் விசன்ட்ரஸ்ட் அமைப்பும் இணைந்து யாழ். மாவட்டத்தில் கிராம மட்ட பெண்கள் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தற்பாதுகாப்பு பயிற்சி நெறியை கடந்த 2,3,4 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை யாழ். கன்னாதிட்டி காளி கோவில் மண்டபத்தில் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த பயிற்சி நெறிக்காக, சிங்கப்பூர் மற்றும் இந்தியாவில் இருந்து பயிற்றுவிப்பாளர்கள் வரவழைக்கப்பட்டு பயிற்சிகளை வழங்கியிருந்தனர். தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெற்ற இப்பயிற்சி நெறிக்கு, பிரதேச செயலகங்களிலிருந்து மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமமட்ட பொது அமைப்புக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெண் அங்கத்தவர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் உட்பட 60 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

# தமிழ் சினிமா வரலாறு

## தமிழ்த் திரைப்படங்களுக்கு 5 ஆயிரம் பாடல்கள் எழுதிய கண்ணதாசன்

**293**

பாடல் டைரக்டருக்கு பிடித்து விட்டது. அந்தப் பாடலை கதாநாயகி மாதுரிதேவிக்காக டி.வி.ரத்னம் பாடினார். கண்ணதாசனின் முதல் பாடலே ஹிட் ஆகியது.

### வசனம்

கொல்கத்தாவில் தேவகி போஸ் என்ற பிரபல டைரக்டர் இருந்தார். அவர் வங்க மொழியில் தயாரித்த ரத்ன தீபம் என்ற படத்தை தமிழில் டப் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்தன. அந்தப் படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பு கண்ணதாசனுக்கு கிடைத்தது. அவர் கொல்கத்தாவுக்குச் சென்று வசனத்தை எழுதிக் கொடுத்து விட்டு திரும்பினார்.

### போராட்டம்

1953 தி.மு.கழகம் நடத்திய டால்மியாபுரம் போராட்டத்தில் கண்ணதாசன் கலந்து கொண்டார். அவருக்கு 1 1/2 ஆண்டு ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்பின் தென்றல் என்ற வாரப் பத்திரிகையை தொடங்கினார். அதில் கண்ணதாசன் எழுதிய கவிதைகளும் கட்டுரைகளும் அவருக்கு புகழ் தேடித் தந்தன.

### மோதல்

1954 இல் நேஷனல் புரொடக்ஷன்ஸ் என்ற படக்கம்பனி ஆங்கிலப்படம் ஒன்றின் கதையை தழுவி அம்மையப்பன் என்ற படத்தை தயாரித்தது. சரித்திரப் பின்னணியுடன் இதன் திரைக்கதை, வசனத்தை கருணாநிதி எழுதினார். இதில் எஸ்.ராஜேந்திரன், ஜி.சகுந்தலா ஜோடியாக நடித்தனர். ஏ.பீம் சிங் டைரக்ட் செய்தார்.


இதே கதையை மாடர்ன் தியேட்டர்ஸார் சுகம் எங்கே என்ற பெயரில் சமூகப் படமாகத் தயாரித்தார்கள். இப்படத்தை கே.ராம்நாத் டைரக்ட் செய்தார். வசனத்தை கண்ணதாசனும் ஏ.கே.வேலனும் எழுதினார்கள்.

இரண்டு படங்களின் கதைகளும் ஒரே மாதிரி இருந்ததுடன் சில கட்டங்களில் வசனமும் ஒரே மாதிரி இருந்தது.

இதனால் கருணாநிதிக்கும் கண்ணதாசனுக்கும் உரசல் ஏற்பட்டது. இருவருடைய கருத்து மோதல்களும் முரசொலியிலும்தென்றலிலும் எதிரொலித்தன.

பாடல் ஆசிரியராகப் புகழ் பெறத்தொடங்கிய அதே வேளையில் கதை, வசன ஆசிரியராகவும் முத்திரை பதித்தார் கண்ணதாசன்.

மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த இல்லற ஜோதி என்ற படத்துக்கு கதை, வசனம், பாடல் எழுதினார். இதில் சிவாஜிகணேசன், பத்மினி, ஸ்ரீரஞ்சினி, ஆகியோர் நடித்தனர். சிவாஜிகணேசன் கவிதை உள்ளம் படைத்தவர். அவர் மனைவி ஸ்ரீரஞ்சினியோ அதிகம் படிக்காத கர்நாடகம்.



கண்ணதாசனுக்கு காமராஜர் பொன்னாடை.

இந்நிலையில் நடனத்தில் திறமை படைத்த அதிகம் படித்த பத்மினியின் அறிமுகம் சிவாஜிக்கு கிடைக்கிறது. இந்த முக்கோண காதல் கதையை திறம்பட கையாண்டிருக்கிறார் கண்ணதாசன்.

டி.ஆர்.சுந்தரம் தயாரித்த இந்தப்படத்தை ஜி.ஆர். ராவ் டைரக்ட் செய்தார்.

படம் தயாரானதும் முதல் பிரதியை டி.ஆர்.சுந்தரம் போட்டுப்பார்த்தார். படம் நன்றாக இருந்த போதிலும் ரசிகர்களை கவர்ந்திழுக்க இன்னொரு அம்சம் தேவை என்று கருதினார். சுந்தரம் கேட்டுகொண்டபடி அனார் கலி ஓரங்க நாடகத்தை கலைஞர் எழுதிக்கொடுத்தார். சலீமாக சிவாஜியும் அனார் கலியாக பத்மினியும் நடித்தனர். இல்லற ஜோதியின் சிறப்பு அம்சமாக இந்த ஓரங்க நாடகம் திகழ்ந்தது.


இதன்பின் சிவாஜிகணேசன் நடித்த தெனாலிராமன், நானே ராஜா படங்களுக்கும் எம்.ஜி.ஆர் நடித்த மதுரை வீரன், ராஜா தேசிங்கு ஆகிய படங்களுக்கும் கண்ணதாசன் வசனம் எழுதினார். எம்.ஜி. ஆர். சொந்தமாக தயாரித்த நாடோடி மன்னன் படத்துக்கு கண்ணதாசனும் ரவீந்தரும் இணைந்து வசனம் எழுதினர்.

### பாடல்கள்

கண்ணதாசன் கதை, வசனம் எழுதுவதிலும் திறமை காட்டினார் என்றாலும் பாடல்கள் எழுதுவதில் முடிசூடா மன்னராக விளங்கினார்.

(தொடரும்)

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் யூனியன் அஸ்யூரன்ஸ் உடன்படிக்கை



புதிய வாடிக்கையாளர் பிரிவுகளுக்கு பொருத்தமான காப்புறுதித் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் வகையில் புத்தாக்கமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் யூனியன் அஷ்யூரன்ஸ் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் விசேட உடன்படிக்கையொன்றை அண்மையில் செய்துள்ளது.

இதன் பிரகாரம் சங்கத்திலுள்ள அங்கத்தவர்கள் மத்தியில் தமது காப்புறுதித் தீர்வுகளை பிரபல்யப்படுத்தும் வகையில் விசேட நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

மனிதர்கள் எனும் வகையில் எவருக்கும் தமது வாழ்க்கையில் பல தேவைகள் இருக்கும். தற்கால உலகில் வாழ்க்கை முறைக்கமைய இந்த தேவைகளில் கல்வி, முதலீடு மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்ற தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்களுக்கு இந்த தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள கைகொடுத்து உதவும் வகையில் தமது சேவைகளை யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கி வருகிறது.


இந்த ஒன்றிணைவின் பிரகாரம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தமது குழந்தைகளின் கல்வித் தேவைகள், முதலீட்டுத் தேவைகள் போன்று சுகாதார மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்காக பொருத்தமான தீர்வுகள் பலதை யூனியன் அஷ்யூரன்ஸிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் பிரபல்யம் பெற்ற தொழில் நிபுணர்கள் மத்தியில் காப்புறுதி சேவைகளை பிரபல்யப்படுத்தும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த செயற்பாட்டில் தனது நற்பெயரை மேலும் உயர்த்திக் கொள்வதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னெடுத்திருந்த விசேடமான நிகழ்ச்சியாக இதை குறிப்பிட முடியும்.

இலங்கையின் மொத்த சனத் தொகையில் காப்புறுதியை பெற்றுள் ளவர்கள் மொத்தம் 12.5 சதவீதமான வர்கள் மாத்திரமே. எவ்வாறாயினும் தற்போது காணப்படும் சமூக நிலை களில் ஆயுள் காப்புறுதியொன்றின் பெறுமதி முன்னொருபோதுமில்லாத வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக தென்பட ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கையர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் இந்நாட்டின் மொத்த காப்புறுதித்துறையும் இணைந்து குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் விசேட செயற்திட்டமொன்றை முன்னெடுத்திருந்தன. இதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் தனது முழுப் பங்களிப்பை வழங்கியிருந்தது.

1974ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இந்நாட்டின் முன்னணி தொழிற்சங்கங்களில் ஒன்றாகும்.

# செலான் வங்கிக்கு விருது



சமூக வலைத்தள மற்றும் டிஜிட்டல் ஊடகத்துறையில், இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் முன்னணி வகிக்கும் செலான் வங்கி, அதன் டிஜிட்டல் இருப்பைப் பாராட்டி பல உள்ளூர் மற்றும் சர்வதேச விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. இவ்வருடமும் அதன் விருதுப் பட்டியலில் அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற சமூக வலைத்தளம் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தலுக்கான CMO ஆசியா விருதுகளின் போது இரு தங்கம் மற்றும் இரு சிறப்பு விருதுகளை இணைத்துக் கொண்டது. செலான் வங்கி, அதன் தனித்துவ முறையிலான 24X7, உடனடி தீர்வுகளை வழங்கும் டிஜிட்டல் சார் வாடிக்கையாளர் சேவைத்தளங்களுக்காகத் தங்க விருதை பெற்றுக்கொண்டது. முகப்புத்தகத்தின் சிறந்த பயன்பாட்டுக்காக, வங்கியின் Facebook பக்கம் தங்கத்தைப் பெற்றுக்கொண்டது. சமூகம்சார் உறவை வளர்க்கும் வங்கியின் fb பக்கம் அதன் வாடிக்கையாளர்களுடன், நெருங்கிய உறவைப் பேணி வருகிறது. www. facebook. com/SeylanBankd ஊடாக இயங்கும் முகப்புத்தக பக்கம் சுவாரஷ்யமான உள்ளடக்கம், இணைந்து செயற்படக்கூடிய apps மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்கள், சிறப்பு ஊக்குவிப்புக்கள் மற்றும் ரசிகர்களுடனான உடனடித் தொடர்பு ஆகிய 6 தூண்களின் கீழ் செயற்படுகிறது. இப்பக்கம் 476,000 இற்கும் மேற்பட்ட ரசிகர்களைக் கொண்டுள்ளதுடன் ஏனைய சமூக வலைத்தளங்களான Instagram> Twitter> LinkedIn மற்றும் Snapchat ஆகியவற்றிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. வங்கி சிறந்த இணையத்தளம் மற்றும் சந்தைப்படுத்தலில் சமூக வலைத்தளத்தின் சிறந்த பயன்பாடு ஆகியவற்றுக்காகச் சிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டது. அண்மையில் மீள் அறிமுகப்படுத்தப்பட்ட இணையத்தளம் வாடிக்கையாளரின் வசதி கருதி online calculator, online real time chat, செலான் டிக்கிரியில் அதன் அடுத்த பரிசு என்ன என்பதைக் கண்டறியும் gift calculator கணக்கை ஆரம்பிக்கும் வசதி மற்றும் வங்கியின் சேவைகள் தொடர்பான தொடர்ச்சியான மேம்படுத்தல் மூலம் வாடிக்கையாளரின் தேவைகளை நிறைவேற்றுகிறது என செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் பிரத்தியேக வங்கியியல் பிரதி பொது முகாமையாளர் திலான் விஜயசேகர தெரிவித்தார்.

# தேயிலைத் துறை எதிர்பார்க்கும் மாற்றம்




நாட்டின் முக்கிய வெளிநாட்டு ஏற்றுமதி வருமானமீட்டும் துறைகளில் ஒன்றான தேயிலைத் துறையைத் தொடர்ந்து தக்கவைத்து, இலாபகரமானதாக முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் இந்தத்துறையில் உடனடியாக மாற்றங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுவதாக, தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் அறிவித்துள்ளது. கொழும்பில் நடைபெற்ற தேயிலைத் துறையின் தற்போதைய நிலை மற்றும் தேயிலை ஏற்றுமதிச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு பற்றிய அறிவித்தல்களை முன்வைக்கும் மாநாட்டில் இந்தக் கருத்தை தேயிலை ஏற்றுமதிச் சங்கம் அறிவித்திருந்தது.

சர்வதேச மட்டத்தில்,தேயிலைத் துறை என்பது,கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. குறிப்பாக 47சதவீத வளர்ச்சி பதிவாகியுள்ளது. இலங்கை 5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் காணப்படும் நிலையில், இந்த வளர்ச்சியை இல ங்கைப் பதிவு செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது. ரஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இலங்கையின் தே யிலை ஏற்றுமதியில் முக்கிய பங்கை வகிக்கும் நாடுகளாகும். குறிப்பாக 75 சதவீதமான ஏற்றுமதிகள் இந்த நாடுகளுக்கு, ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நாடுகளில் காணப்படும் அரசியல் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக, வியாபார கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை இலங்கையின் தேயிலைத் துறையின் வளர்ச்சியில் தடங்கலை ஏற்படுத்தியுள்ளன என தேயிலை ஏற்றுமதியாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.அடுத்த ஆண்டில் இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் 150 வருட பூர்த்தியைக் கொண்டாடவுள்ளது. அத்துடன் 2020-ம் ஆண்டளவில் தேயிலை ஏற்றுமதி வருமானத்தை 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துக் கொள்வது எனும் சவால் நிறைந்த இலக்கு காணப்படும் நிலையில், தேயிலைச்சபை மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றிடமிருந்து முழுமையான ஒத்துழைப்பை தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம் எதிர்பார்த்துள்ளது.

# கொமர்சல் கிரடிட்டிற்கு விருது

கொரியாவின் சியோல் நகரில் அண்மையில் இடம்பெற்ற 2ஆவது ஆசிய சந்தைப்படுத்தல் சிறப்புத்துவ விருதுகள் (AMEA) நிகழ்வின் போது, சந்தைப்படுத்தல் துறையில் ஆசியாவின் மிக முக்கியமான நிர்வாக ஆளுகை அமைப்பாக திகழும் ஆசிய சந்தைப்படுத்தல் சம்மேளனத்தினால் (AMF), 2016-ம் ஆண்டின் சந்தைப்படுத்தல் கம்பனி விருதுப் பிரிவின் தேசிய வெற்றியாளராக கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் அறிவிக்கப்பட்டுள்ளது. தமது நிறுவனத்தினதும் ஊழியர்களினதும் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கக் கூடிய விதத்தில் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் இவ்வருட காலத்தில் பல்வேறு சந்தைப்படுத்தல் மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தி காண்பித்தமைக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

கொமர்ஷல் கிரெடிட் நிறுவனம் தொடர்ச்சியாக கடைப்பிடித்து வருகின்ற புத்தாக்கமான சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள், தந்திரோபாயங்கள் மற்றும் பெறுமானங்களை இவ்விருது அங்கீகரித்து பாராட்டுகின்றது. அத்தோடு விற்பனை வளர்ச்சி, சந்தைப்பங்கு மற்றும் தேறிய வருமானம் ஆகியவற்றில் இவ்வாறான உபாயங்கள் பெற்றுத் தந்துள்ள பெறுபேறுகளை மேலும் வெளிக்காட்டுவதாகவும் அமைகின்றது. இது எமது பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மைற்கல்லாக காணப்படுகின்றது என்று கொமர்ஷல் கிரெடிட் நிறுவனத்தின் பிரதம தொழிற்பாட்டு அதிகாரி ரஜீவ் காசி சிட்டி தெரிவித்தார்.

AMF ஆசிய சந்தைப்படுத்தல் சிறப்புத்துவ விருது என்பது ஆசிய பிராந்தியத்தில் சந்தைப்படுத்தல் துறையிலான சிறப்புத்துவ செயற்பாட்டுக்கு மிகவுயர்ந்த அங்கீகாரத்தை அளிக்கும் ஒரு விருது வழங்கலாக காணப்படுவதுடன், AMF அங்கத்துவ நாடுகளினால் அளிக்கப்படுகின்ற வாக்களிப்புக்கு அமைவாக இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன என்று ஆசிய சந்தைப்படுத்தல் சம்மேளனத்தின் 1ஆம் நிலை தலைவரும் இந்த செயற்றிட்டத்தின் ஒட்டு மொத்த தலைவருமான கிவன் அல்பர்ரசின் கூறினார்.

பதிவுசெய்யப்பட்ட ஒரு நிதி நிறுவனமாக திகழும் கொமர்ஷல் கிரெடிட் நிறுவனமானது, நாடெங்கிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ள பரந்த கிளை வலையமைப்புடன் செயற்பட்டு வருவதுடன் சுமார் 34 வருடகால வரலாற்றையும் கொண்டுள்ளது.

# கொமர்சல் வங்கியின் வெகுமதித் திட்டம்

COMBANK MAX LOYALTY

கொம்பாங்க் மக்ஸ் லோயல்டி வெகுமதித் திட்டத்தை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது. இலங்கையில் முதற் தடவையாக கிரெடிட் மற்றும் டெபிட் கார்ட் என்பவற்றை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகளை வழங்கும் முதலாவது திட்டமாக, இது அமைந்துள்ளது.

பொருட்கள் கொள்வனவுகளின் போது, இந்த அட்டைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு, புள்ளிகள் வழங்கப்பட்டு வெகுமதி அளிக்கும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியத்தை தளமாகக் கொண்டியங்கும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்வுகள் நிறுவனமான இன்பினியா சேர்விஸஸ் மற்றும் சொலூஷன்ஸ் நிறுவனத்தின் பங்குடைமையுடன், இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது கொமர்ஷல் வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு பாவனைக்கும் ஒரு ரூபாய் எனும் அடிப்படையில் இந்தப் புள்ளிகள் அமையும். பிளாட்டினம், கோல்ட் மற்றும் சில்வர் அட்டைகளை வைத்திருப் பவர்கள், அவற்றைப் பாவித்து கொள்வனவு செய்யும் ஒவ்வொரு 300 ரூபாய்க்கும் ஒரு புள்ளியைப் பெறுவர். ஏனைய டெபிட் மற்றும் கிரடிட் அட்டைகளைப் பயன்படுத்துபவர்கள் ஒவ்வொரு 500 ரூபாய்க்கும் ஒரு புள்ளியைப் பெறுவர். 2016 நவம்பர் 1ஆம் திகதி முதல், இந்தத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம் முதல் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படும் வங்கி மீதிக்கூற்றோடு, அவர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளி விவரங்களும் இணைக்கப்படும். வாடிக்கையாளர்களுக்கு தமது அட்டைகளைப் பாவிக்கக் கூடிய இடங்கள் பற்றிய பல வியக்கத்தக்க தெரிவுகளை முன்வைக்கவுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது. உலகின் முன்னணி விமான சேவைகள், ஹொட்டல்கள், ஈ-வர்த்தக நிலையங்கள் உட்பட இன்னும் பல வர்த்தக நிலையங்களும், இந்தத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளன.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,424.85 | 6,435.17 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,572.36 | 3,608.55 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 1,563.025 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சிரஸ் கிக்கடுவ(13.80), ஹகவத்தை (34.90), ஆர்பிகோ இன்சுரன்ஸ்(13.40),லக்கி லங்கா(1.60),சீரா கேபிள்(3.50).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** புளூ டைமன்ட்ஸ்(0.50),கொன்வீனியன்ஸ் பூட்(332.00),மகாவலி றீச்(20.30),மடுல்சிமா(6.80), ரீ சேவிஸ்(650.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 146.57 | 150.33 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 181.69 | 187.97 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 161.69 | 167.90 |
| சுவிஸ் பிராங் | 149.49 | 155.52 |
| கனேடிய டொலர் | 108.76 | 113.14 |
| அவுஸ்திரேலிய டொலர் | 111.55 | 116.59 |
| சிங்கப்பூர் டொலர் | 105.40 | 109.31 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.47 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.21 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 40.22 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# இலங்கைத் தூதுவரைத் தாக்கிய குழுவிற்கு மலேசியாவில் தடை

(கோலாலம்பூர்)

**மலேசியாவில் வைத்து இலங்கையின் உயர்ஸ்தானிகர் இப்ராஹிம் அன்சார் மீது தாக்குதல் நடத்திய குழுவை தடை செய்ய மலேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கலந்தாலோசிக்க, இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்கள குழுவொன்று மலேசியா சென்றுள்ளது. இதன் போது இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கான குழு அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த குழுவை மலேசியாவில் தடை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கையின் அதிகாரிக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த தாக்குதலை நடத்தியவர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகைளை தாக்கல் செய்ய மலேசிய பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இதேவேளை இப்ராஹிம் அன்சார் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பான விசாரணை இன்று மீண்டும் நீதிமன்றத்துக்கு வருகிறது. (இ-7)

# இசைமேதை அமரதேவவின் பெயரில் தேசிய நுண்கலை மத்திய நிலையம்

இசைமேதை பண்டித் டபிள்யூ. டீ. அமரதேவவின் தொலைநோக்கை நாட்டின் எதிர்கால தலைமுறையிடம் எடுத்துச்செல்வதற்கு அமரதேவ நுண்கலை மத்திய நிலையம் என்ற பெயரில் ஒரு தேசிய கேந்திர நிலையத்தை தாபிக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இதற்குத் தேவையான வழிகாட்டல்களை அரசாங்கத்திற்கு வழங்குமாறு ஜனாதிபதி கலைஞர்களிடம் கேட்டுக்கொண்டார்.

தேசத்தை எழுச்சிபெறச்செய்த மிகப்பெரும் கலைஞரான காலம் சென்ற டபிள்யூ.டீ அமரதேவவின் இறுதி நிகழ்வு பூரண அரச மரியாதையுடன் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு இரங்கல் உரை நிகழ்த்தும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

கலாநிதிபண்டித்அமரதேவவின் மறைவையிட்டு முழு நாடுமே சோகத்தில் ஆழ்ந்துள்ளது. அவரது மறைவை அறிந்து நாட்டு மக்கள் மட்டுமன்றி நாட்டுக்கு வெளியே உள்ள இலங்கையர்களும் அவரைப்பற்றி அறிந்த வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் ரசிகர்களும் கவலையடைந்துள்ளனர்.

பண்டித் அமரதேவ தேசத்தை எழுச்சிபெறச் செய்த ஒரு யுக புருஷர் ஆவார். அவருக்கு நிகரான ஒரு கலைஞர் இந்த யுகத்தில் தோன்றவில்லை என பேராசிரியர் சுனில் ஆரியரட்ண கூறினார். நாம் அனைவருமே அதனை வாதப் பிரதிவாதங்களின்றி ஏற்றுக்கொள்வோம் என நான் நினைக்கிறேன்.

அமரதேவ உடல் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் அவரது தொலைநோக்கும் அவரது கம்பீரக் குரலின் வலிமையும் என்றும் அழியாமல் நிலைத்திருக்குமென நான் நம்புகிறேன். அவர் என்றும் எம் நினைவில் வாழ்வார். 25 வருடங்களுக்கு முன்னர் நான் அமர தவவிடம் பொலநறுவை போன்ற பின் தங்கிய பிரதேச ங்களுக்கு வருகை தந்து பாடசாலை பிள்ளைகளுக்கு உங்களது இசை அறிவை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அவர் சிரித்த முகத்துடன் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் எனது அழைப்பை ஏற்றுக்கொண்டார். அதற்குப் பின்னர் அடிக்கடி பொலநறுவைக்கு விஜயம் செய்தார். பாடசாலை பிள்ளைகளுக்கு மத்தியில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தினார். அச்சந்தர்ப்பங்களில் மாலை வேளைகளில் பராக்கிரமசமுத்திரத்தின் அணைக்கட்டின் மேல் அமர்ந்து நிலா ஒளியில் அவரும் நானும் கதைத்துக் கொண்டு இருப்போம். அப்போது அவர் பராக்கிரமசமுத்திரத்தைப் பற்றி பேசினார். வெஹர விகாரையின் தாகோபாவைப் பற்றி பேசினார். விவசாய சமூகத்தைப் பற்றியும் கலை இலக்கியம் பற்றியும் இரசனையோடு பேசினார்.

மிகப்பெரிய கலைஞர் என்ற வகையில் அவர் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் பல விருதுகளைப் பெற்றுக்கொண்டார். அவரது குரல் வளமும் இசை அறிவும் இந்த நாட்டின் கலைஞர்கள், அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், பாடசாலைப் பிள்ளைகள், சாதாரண பொதுமக்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரிடத்திலும் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. எனவே இந்த நாட்டு மக்கள் மத்தியில் அவருக்கு தனிப்பெரும் மரியாதையும் ஒரு உயர்ந்த இடமும் இருந்தது.

அவருக்கு பூரண அரச மரியாதையை வழங்குவதற்கும் ஒரு வாரகாலத்தை துக்க வாரமாகப் பிரகடனப்படுத்தவும், பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சுதந்திர சதுக்கத்தை தெரிவுசெய்யவும் நாம் தீர்மானித்தோம். இந்த உன்னத யுக புருஷருக்கு அரசாங்கம் என்ற வகையில் கொடுக்க வேண்டிய உச்ச கௌரவத்தையும் மரியாதையையும் கொடுக்கும் வகையிலேயே இதனை நாம் செய்தோம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# சிறைக்குள் பேரறிவு

03

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்த தொடர்...



**"நாணயமும் ஒழுக்கமும் நிறைந்த மனிதம்". அதன் நீட்சியாகத்தான் தமிழகத்தின் அன்றைய உணர்வுகளின் வெளிப்பாடாக எல்லோரையும் போல் ஈழ விடுதலைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர் எனது பெற்றோர். அந்த உணர்வோடு தான் நானும் வளர்ந்தேன். அன்றைய இலட்சக் கணக்கான இளைஞர்களிடையே அதே உணர்வு தான் என்னிலும் இருந்தது.**

..எனது தாயாரும் என்னிடம் மிகவும் குறைபட்டுக் கொண்டார். சோகமாக முகத்தை வைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். அவைதான் நான் எதிர் கொண்ட மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பம் என நினைக்கிறேன். இருப்பினும், எனது இயல்பை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை அல்லது அது மாறிவிடக் கூடாது என்பதாகத் தான் எனது 25 ஆண்டுகால போராட்டமும் இருந்திருக்கிறது எனலாம்.

இதைச் சொல்வதால் எனக்குத் துன்பமே இல்லை என்றோ, நான் ஏதோ அசாத்திய துணிச்சல்காரன் என்றோ தப்புக் கணக்கு போட்டுவிடாதீர்கள். எல்லோரையும் போல் சாவை விரும்பாத, வாழ்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்ட மனிதன் நான். "அஞ்சுவது அஞ்சாமை பேதமை" என்பதில் நம்பிக்கை உடைய மிகச் சாதாரணன்.

இந்தப் பின்னணியில்தான் எனது 25 ஆண்டுகால அனுபவங்களை உங்கள்முன் இறக்கிவைக்க முயன்றுள்ளேன். இது குறித்து எழுவர் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடும் சகோதரர்கள் கேட்டுக்கொண்ட போது, "25 ஆண்டு காலவலி" என்பதைவிட "நிகழ்ந்த பல முக்கிய திருப்புமுனை சம்பவங்களும், ஈடு செய்யமுடியா சில இழப்புகளும்" என்ற அளவில் இந்தத் தொடரை குறுக்கிக் கொள்ள வேண்டுகோள் வைத்தேன். ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறேன். இந்தத் தொடர் எம் எழுவரின் விடுதலையை விரைவுபடுத்தும் என்கிற உறுதியோடு தொடர்கிறேன்...

மறுபிறவியில் சிறிதும் நம்பிக்கையற்ற நான் எல்லா உயிர்களுக்கும் வாழ்வு ஒரு முறைதான் என்ற கொள்கையில் மிகுந்த நம்பிக்கை கொண்டவன். பேரறிவாளன் என்கிற மனிதன் பிறந்துவிட்டபின் அவன் ஒருநாள் மடிந்து சாகத்தான் போகிறான். மீண்டும் ஒருபோதும் அவன் எந்த வடிவிலும் எழுந்து வரப்போவதே இல்லை.

எல்லா மனிதர்களின் வாழ்வும் இப்படித்தான் தொடங்கி முடியப்போகிறது. அதில், மாற்றமில்லை. அந்த மனித வாழ்வில் 20 வயது முதல் 45 வரையிலான வாழ்வைத் தான் நாம் Prime Period என்று சொல்கிறோம். சிதைந்த காலகட்டம், இளமை வாழ்வு சிறைக்கம்பிகளுக்குப் பின்னாலே கடந்து போய்விட்டது. அதேபோல் தான், இன்பமும் துன்பமும் கலந்தது தான் மனித வாழ்வு என்போம். 25 ஆண்டுகளாகத் துன்பம் மட்டுமே நிறைந்ததாக வாழ்க்கை மாறிவிடுமா என்ன? எமக்கு அப்படித்தான் மாறிப்போனது. (இந்த இடத்தில் எமக்கு என்பதை எங்கள் எழுவர் என நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுகிறேன்.)

ஒற்றை நாளில் எதிர்கால



வாழ்வையே புரட்டிப்போட்ட அந்தத் தினம் 1991ஆம் ஆண்டு ஜூன் 11ஆம் திகதி இரவு சுமார் 10.30 மணி. எனது வாழ்வைத் தலைகீழாகப் புரட்டிப்போட்ட அன்றைய நிகழ்வுக்குக் காரணமான பின்னணி குறித்தும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

ஒரு சாதாரண, பள்ளி உடற்கல்வி ஆசிரியரான தந்தைக்கும் எந்தப் பெரிய உலக அனுபவமும் அறிந்திராத தாயாருக்கும் மகனாகப் பிறந்த எனக்கு எனது பெற்றோரால் சொல்லித் தரப்பட்ட உயர்ந்த வாழ்க்கைத் தத்துவம் எல்லாம் ஒன்றே ஒன்றுதான். "நாணயமும் ஒழுக்கமும் நிறைந்த மனிதம்". அதன் நீட்சியாகத்தான் தமிழகத்தின் அன்றைய உணர்வுகளின் வெளிப்பாடாக எல்லோரையும் போல் ஈழ விடுதலைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர் எனது பெற்றோர். அந்த உணர்வோடு தான் நானும் வளர்ந்தேன். அன்றைய இலட்சக்கணக்கான இளைஞர்களிடையே இருந்த அதே உணர்வுதான் என்னிலும் இருந்தது. ஈழத்தில் 1983 ஜூலை கலவரத்தை ஒட்டித் தமிழகத்தில் நடந்த மாணவர்கள், ஆசிரியர்கள் கூட்டுப் போராட்டத்தின் எதிரொலியாக எங்களது ஊர் பாடசாலைகளின் சார்பில் பேரணிகள் நடந்தன. 12 வயது மாணவனாக நானும் அதில் பங்கேற்றேன்.

இந்த நேரத்தில் எனது குடும்பத்தின் கொள்கைப் பின்னணி குறித்தும் கூறிவிடுவது பொருத்த மாக இருக்கும் என நினைக்கிறேன். எனது தந்தை வழிப் பாட்டன் கே.கே.தங்கவேல், தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு எங்கள் ஊர் பகுதியின் தள கர்த்தராகத் திகழ்ந்தார். தனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் அந்தக் கொள்கை வழியே வளர்த்தார். எனவே, எனது தந்தை அவர் வழியே நானும் தமிழர் வரலாற்றைப் புரட்டிப் போட்ட அந்தக் கிழவரின் கொள்கை வழியே வளர்ந்ததில் வியப்பு ஏதுமில்லை.

சாதி ஒழிப்பு, சமூக நீதி, பெண்ணுரிமை, கடவுள் மறுப்பு, மனித நேயம் என மக்களின் துன்பங்கள் களையும் தூயச் சிந்தனைகளுடன் தொடங்கிய எனது வாழ்க்கைப் பயணம் என்னை நானே காத்துக் கொள்ளவும், எனது விடுதலை குறித்து சிந்திக்கவும், செயற்படவுமான இழிநிலையை எட்டும் என ஒரு நாளும் நான் கற்பனை செய்ததில்லை. இந்தக் கோணத்தில் எனது தற்போதைய வாழ்வின் போக்கைப் பொருத்திப் பார்க்கிற போதெல் லாம் உயிர் அறுக்கும் வேதனையை அனுபவித்து இருக்கிறேன்.

(வலிகள் தொடரும்...)

பொய்யால் கவரப்பட்டவன் மனம் நல்ல விடயங்களில் சுவை காணாது

~ ஹொரேஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தாமரைப் பூவின் தேனை தலைமைத் தவளை உணர்ந்தபோது...

குளத்தில் இருக்கும் தாமரைப் பூவின் தேனை தவளைகள் ஒருபோதும் அறிவதில்லை. ஆனால் தாமரையின் மலர்வு கண்டு அதில் இருக்கும் தேனைப் பருக வண்டுகள் எங்கிருந்தோ ஓடி வருகின்றன.

குளத்தில் இருக்கும் தண்ணீரைப் பருகும் தவளைகளுக்கு தாமரையில் இருக்கும் தேனின் சுவை தெரியாததால் அவை ஒருபோதும் தேன் உண்டு மகிழ்வதில்லை.

இந்த அவலம் தவளைகளுக்கு மட்டுமல்ல நம் அரசியலிலும் இருக்கவே செய்கிறது.

ஆம், வடக்கின் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களின் பலம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தர் கூறியுள்ளார்.

வடக்கின் முதலமைச்சர் தமிழ் மக்களுக்குப் பலம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் அரசியல் கட்சியை அமைத்து விட்டால் அது தமக்கு ஆபத்தாகிவிடும் என்பது தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளின் நினைப்பு.

இந்த நினைப்பை மையப்படுத்தி வடக்கின் முதல்வருக்கு எதிராக தமிழ் அரசியல்வாதிகள் சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு எதிர்ப்பைச் செய்பவர்கள் இரா. சம்பந்தனைத் தலைவராகக் கொண்டிருக்கக் கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய சில அரசியல்வாதிகள் என்பது உணர்தற்குரியது.

இங்குதான் ஒரு சந்தேகம் எழுகிறது. அதாவது வடக்கின் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களின் பலம் என்று சம்பந்தர் கூறுகின்றார்.

எனினும் வடக்கு மாகாண அரசு எதையும் செய்ய முடியாத அளவுக்கு சபை உறுப்பினர்கள் சிலர் முதலமைச்சருக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

ஆக, தமிழ் மக்களின் பலம் என்று முதலமைச்சரைக் கூறுகின்ற சம்பந்தர் தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துவதில் இடர்படுவது ஏன் என்ற கேள்வி எழுகிறது.

தமிழ் மக்களின் அரசு மலர்ந்தது என்று நாம் நம்பியிருக்கையில் வடக்கு மாகாண சபையில் இன்றுவரை முதல்வரை எதிர்க்கின்றவர்கள் இருந்து கொண்டு மாகாண சபையின் இயங்கு நிலைக்கு தடை செய்வதும்,

முதலமைச்சர் மீது குற்றம் சாட்டுவதுமான சதித் திட்டங்களை அரங்கேற்றுவது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தருக்கு தெரியாதா? அல்லது நீங்கள் அதைச் செய்யுங்கள் நான் இப்படிப் பேசுகிறேன் என்று சம்பந்தரே திருநடனம் புரிகின்றாரா? என்பதுதான் இன்னமும் புரியாமல் உள்ளது.

எது எப்படியாயினும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் பலம். இந்த உண்மையை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். தமிழ் மக்கள் உணர்ந்துள்ள உண்மையை சம்பந்தர் அவர்களும் வெளிப்படையாகக் கூறியுள்ளமை ஆறுதலைத் தருகின்றது.

எனினும் தாமரை மலரில் இருக்கக்கூடிய தேனை உணராத தவளைகள் நம் அரசியல் குளத்தில் இருப்பதுதான் கவலை தருகிறது.

# விரிவாக்கம் பெறும் பிணைமுறி விவகாரம்

இலங்கை மத்திய வங்கியின் 10 வருட கால பிணைமுறி விடயங்களை விசாரணை செய்யும் நீதியியல் விசாரணைப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சண்டே ரைம்ஸ் இற்கு கூறியுள்ளார்.

சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அவர் அளித்திருந்த பேட்டியொன்றில் இது பற்றத் தெரிவித்திருந்த அவர் இந்த விசாரணை களை அரசியல்வாதிகளின் கரங்களிலிருந்து அகற்றவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகவும் கூறுகிறார்.

கோப் விவகாரம் தொடர்பாக கண்டுகொள்ளப்படாது விடப்பட்ட விடயங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவின் அறிகைகை கடந்த வாரம் வெளிப்படுத்தப்பட்டது தெரிந்ததே. முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் குறிப்பிட்ட முறி விற்பனையில் தலையீடுகளையோ நெருக்குதல்களையோ மேற்கொண்டதாகவும் ஒரு காலத்தில் அவரின் நிலையான திறைசேரி அனுபவங்களில் கூட தொடர்பினைக் கொண்டிருந்த அவரது மருமகன் முறி விற்பனையில் பெருந் தொகையான வருமானங்களை ஈட்டியிருந்ததாகவும் அறிக்கை கூறுகிறது.

இந்தவித இடைப் பரிமாற்ற விடயங்கள் 2007/ 2008 காலப்பகுதிகளிலும் இடம்பெற்றிருந்தபோதிலும் இதுபற்றிய பேச்சுக்களை எவரும் முன்னெடுத்தது கிடையாது. இதுமட்டிலான அறிக்கை இப்போது வெளிவந்திருப்பதால் அதுபற்றி இறுதி முடிவெடுப்பதற்கென சுதந்திரமான, பாரபட்சமற்ற மற்றும் அரசியல்வாதிகளே அற்ற விதமான ஒரு நீதியியல் நிர்வாக அமைப்பொன்றிடம் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும். ஏனென்றால் இப்போதெல்லாம் இவ்விவகாரத்தின் அம்சங்கள் சரியோ, இல்லையோ அது பற்றிய பல்வேறு அரசியல்வாதிகளது கருத்துக்களே விவாதிக்கப்பட்டு வருகின்றன எனக் கூறும் அவர் கடந்த 10 வருட வங்கி முறி சம்பந்தப்பட்ட விடயங்களையும் விசாரிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் கூறுகிறார்.

முறி விற்பனை சம்பந்தமான பெப்ரவரி 27, 2015 விவகாரத்துடன் ஆரம்பித்து பிரச்சினைக்குரிய ஏனைய விடயங்களும் ஆராயப்பட வேண்டியுள்ளது. இலஞ்ச, ஊழல் விடயங்களில் விசாரணையை ஆரம்பித்திருக்கும் சி,ஐ.டி, எப்.சி.ஐ.டி ஆணைக்குழுக்கள் தற்போது பாரிய ஊழல் விசாரணைகளை நிறுத்தி சிறிய சிறிய விவகாரங்களை மட்டும் முன்னெடுத்துச் செல்வது பற்றிய தனது அதிருப்தியை வெளிப்படுத்தும் ஜனாதிபதி, இதன்காரணமாக கடந்த 20 மாத கால பாரிய ஊழல் விடயங்கள் மட்டில் குற்றவாளிகள் எவரும் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படாததையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான விடயங்கள் இந்த வருடத்தில் அல்லாமல் அடுத்த வருடத்திலேயே கருத்திற்கொள்ளப் படுமென்றும் கூறியுள்ளார்.

# மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளில் தாமதம்-சம்பிக்க

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தாமதமாகி வரும் நிலையில், அரசாங்கத்தில் தொடர்ந்தும் இருப்பது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க நேரிடும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் சம்பிக்க இதனை கூறியுள்ளார்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படுவார்கள் என கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கிய வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்படியான நிலைமையில், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்திற்கு மிகவும் பாதிப்பான சூழல் உருவாகியுள்ளது. மிகப் பெரிய ஊழல், மோசடிகள் குறித்து விசாரணை நடத்தாது, சிறிய சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதில் எந்த அர்த்தமும் இல்லை எனவும் சம்பிக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பெற்றோலிய வள அபிவிருத்தி திருத்த சட்டம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலிய வள அபிவிருத்தி திருத்தச் சட்டத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தை தயாரிக்கும் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளதாக அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு என்பனவற்றை கொள்வனவு செய்வது தொடர்பில் முதலீட்டாளர்களை உரிய வகையில் பெற்றுக் கொள்வது குறித்தும் புதிய சட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் முன்னெடுக்க வேண்டிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மற்றும் கட்டளைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெற்றோலிய பயன்பாட்டின் போது நுகர்வோர் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்படவுள்ளதாக மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமின குமாரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக் குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்"

~கரலோஸ் இலினோயஸ் (தாவர வகைப் பாட்டியலாளர்)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** உடுப்பிட்டி வி.சி, நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, வல்வெட்டித்துறை, வெள்ள றோட், உடுப்பிட்டி மகளிர், உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், உடுப்பிட்டி வாசிகசாலை, பொக்கணை சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பரா கல்லூரி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** மடுக்கந்த கிராமம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம், சிதம்பரபுரம், நேரிய குளததிலிருந்து செட்டிக்குளம் வரை, செட்டிக்குளம் வைத்தியசாலை, செட்டிக்குளம் இலங்கை தொலைத்தொடர்பு நிலை யம், வலயம் 6 ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** சிலாவத்துறையிலிருந்து அரிப்பு வரை, சவேரியார்குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வேண்டியதெல்லாம் கிடைக்கும்



உயிர் என்னும் இயக்க ஆற்றலுக்கு மூலமாகவும், இயக்க இடமாகவும், முடிவாக வும் இருப்பது சுத்தவெளியே. இதுவே எல்லாம் வல்ல முழு முதற் பொருள். இதன் இயக்கமே உயிர். உயிரின் படர்க்கையே மனம் என்னும் உண்மை உணர்வே அறிவின் முழுமை.

இவ்வுண்மையைத் தெளிவாக, தவத்தால் தானே அதுவாகி உணர்ந்தால் பேரியக்க மண்டலம் ஒரே ஒரு தொடரியக்கக் களமாகும். அதனினின்று நான் வேறு இல்லை. மற்ற உயிரோ, பொருளோ வேறு இல்லை. அந்த முதற் பொருளே தனது இயல்பூக்கச் சிறப்பால் அனைத்துமாக விளங்குகிறது என்ற நிறைபொருள் அறிவு பூக்கும். அவ்விளக்கம் மறவாது உடலோடு உயிர் இயக்கம் நடைபெறும் வரையில், உயிர்கட்கு அறிவாலும், உடலாலும் கடமை செய்து மனிதகுல வாழ்விற்கு வழிகாட்டியாக வாழ்ந்து நிறைவு பெறுவதே மெய்வழி அறிவாகும்.

மனமே உயிராகி, தெய்வமாகி விரிந்த பேரியக்கக்கள உண்மையினை உணரும் முழுமையில் அறிவாகிறது. இது தெய்வமே மனித உருவில் அறிவின் முழுமையில் காணும் விளக்கம். இவ்விளக்கம் வேண்டிய மக்கள் அறிந்து கொள்ள விரித்த கருத்துக்களே வேதம். இதை ஓதியவனும் ஓதியதை உணர்ந்து தானானவனும் ஞானி.

# கொத்மலை சொக்ஸ் கிண்ணம் ஷாகிரா கல்லூரி சம்பியன்




இலங்கை பாடசாலை காற்பந்து 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்படும் கொத்மலை சொக்ஸ் 2016 உதைந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் யாழ். துரைய ப்பா விளையாட்டு அரங்கில் இடம் பெற்றது.

இதில் புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் ஷாகிரா கல்லூரி அணிகள் மோதின.

ஆட்ட நேர முடிவில் ஷாகிரா கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் இலகு வெற்றி பெற்றது.

கொத்மலை சொக்ஸ் கிண்ணத்தை தனதாக்கியது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# 3ம் இடத்தினை தனதாக்கியது புனித ஹென்றியரசர் கல்லூரி



இலங்கை பாடசாலை காற்பந்து அணிகளுக்கு இடையிலான 19 வயதிற்குட்பட்டோருக்கான கொத்மலே கிண்ண தொடரின் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் புனித ஜோசப் வாஸ் கல்லூரி அணியை 3:0 என்ற கோல்கள் அடிப்படையில் தோற்கடித்து புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றி கொண்டுள்ளது.

இந்தப்போட்டி யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நேற்றுமுன் தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்றது. ஆரம்பத்தில் சற்று தடுமாறிய போதிலும் ஹென்றியரசர் கல்லூரி அணியின் ரூபன்ராஜ் பெற்றுக்கொடுத்த கோலின் மூலம் முதல் பாதியில் அவ்வணி 1-0 என முன்னிலை பெற்றது.

பின்னர் 2 ஆவது பாதியில் 54 ஆம் மற்றும் 79 ஆம் நிமிடங்களில் முறையே ஞானேஸ்வரன், அண்டனிராஜ் மற்றும் அன்டனி ரமேஷ் பெற்றுக் கொடுத்த கோல்களுடன் அவ் வணி தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது. கடந்த வருடம் சுற்றுப்போட் டியின் சம்பியனாக முடிசூடிக் கொண்ட புனித ஹென்றியரசர் கல்லூரி இரண்டு தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொழும்பு ஸாஹிரா கல்லூரி அணியுடனான அரையிறுதிப்போட்டியில் அதிர்ச்சித் தோல்வியை தழுவியமை குறிப்பிடத்தக்கது. (கு)

# பொதுநலவாய பளுதூக்கும் போட்டி சுண்டுக்குளி மாணவி சாதனை




மலேஷியாவில் பினாங் என்னும் இடத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுநலவாய பளு தூக்கும் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி வி. ஆஷிகா 136 Kg நிறையினைத் தூக்கி வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

இவர் 27-10-16 அன்று இலங்கை வந்தடைந்த போது கட்டு நாயக்க விமான நிலையத்தில் இலங்கை பளு தூக்கல் சம்மேளனத்தினால் ஆஷிகாவிற்கும் அவருடைய தந்தையும் பயிற்றுவிப்பாளரும் ஆகிய இ. விஜயபாஸ்கருக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதே தினத்தில் யாழ் வருகை தந்த ஆஷிகாவிற்கு யாழ். மாவட்ட பளுதூக்கல்சங்கம் மாபெரும் வரவேற்பினை யாழ். பஸ் நிலையத்திலிருந்து வீடுவரை அளித்தது.





இந் நிகழ்வு யாழ். மாவட்ட பளு தூக்கும் சங்கத் தலைவர் மா. இளம்பிறையன் தலைமையில் நடைபெற்றது. இச் சங்கத்தின் உப தலைவர் சு. ஹரிகரன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மேலும் ஆஷிகாவின் பாடசாலை உப அதிபர், விளையாட்டுப் பொறுப்பு ஆசிரியர் ஹரிகரன், சின்னப்பு ஆகியோரும் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் திருமாரன் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் கஜேந்திரன் விஜயாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் இந் நிகழ்வுக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் வடமாகாண பளு தூக்கும் வீராங்கனைகள் பலரும் கலந்து கொண்டனர். (கு)



அடம்பன் பாலைக்குழி டிலாசல் விளையாட்டுக்கழகம் மற்றும் அடம்பன் நியூ போண் விளையாட்டுக் கழகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் தனது பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG ) நிதியிலிருந்து அவ் விளையாட்டுக் கழகத்தை ஊக்குவிக்கும் முகமாக ஒருதொகை உதைபந்துகள் மற்றும் கரப்பந்துகளை அண்மையில் மன்னாரில் அமைந்துள்ள அமைச்சரின் உப அலுவலகத்தில் வைத்து கழகத்தின் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டதை படத்தில் காணலாம். (க-281)

# யோகச்சந்திரன் ஞாபகார்த்த உதைபந்தாட்டம் கலைவாணி வி.கழகத்தை வீழ்த்தி சென்.அன்ரனிஸ் அரையிறுதிக்கு தகுதி



வல்வை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் சிதம்பரா கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் யோகச்சந்திரன் ஞாபகார்த்தமாக 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்ட தொடரின் முதலாவது காலிறுதியாட்டம் 05.11.2016 அன்று யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்றது. இப்போட்டியில் தொண்டைமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணல்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் மோதியது:

இப்போட்டியில் முதல் பாதியாட்டத்தில் 03:00 என்ற அடிப்படையில் மணல்காடு சென். அன்ரனிஸ் முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் மணல்காடு சென்.அன்ரனிஸ் ஆதிக்கம் தொடர் கோல்களுடன் 06:00 என்ற ரீதியில் கலைவாணி வி.கழகத்தை வீழ்த்தி அரைஇறுதிக்கு தகுதி பெற்றது சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம். (கு)

# இளைஞர்கள் சீரழிவதற்கு...

உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று மாணவர்கள் வாசிப்புப் பழக்கங்களை முற்றாகத் துறந்து விட்டார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. அரை நூற்றாண்டுக்கு முன்னர் ஒவ்வொரு வீட்டிலும் நூற்றுக்கணக்கான பெறுமதிமிக்க பயன்தரக்கூடிய புத்தகங்கள் நிரம்பியிருந்தன. மாணவ மாணவியர் தமது ஓய்வு நேரங்களில் கற்றல் அல்லது வாசிப்பு வேலைகளிலேயே கூடுதலாக ஈடுபட்டார்கள்.

இன்று நிலைமைகள் அவ்வாறு இல்லை. புத்தகங்கள் இருக்க வேணடிய வீடுகளில் செல்போன்கள் அடுக்கப்படுகின்றன். கற்றலுக்கு செலவழிக்க வேண்டிய நேரத் துணுக்குகள் முகப்புத்தகங்களில் செலவீடு செய்யப்படுகின்றன. வயது வந்தவர்கள் கூட சம்பாஷிப்பதற்குக் கூச்சப்படுகின்ற பல விடயங்கள் இன்று இணைய வலைப்பின்னல்களில் வர்ணப்படங்களுடன் கூடிய செயன்முறை விளக்கங்களுடன் அமைந்திருப்பது சமூகத்தை வேண்டும் என்றே அடுத்துக்கெடுப்பதற்கான ஒரு முன்முயற்சியாகவே தென்படுகின்றது.

பாலியற் கல்வி என்பது பாடப் புத்தகங்களில் சேர்க்கப்படக்கூடிய ஒரு விடயமாக ஆராயப்படும் இவ்வேளையில் அவற்றை ஆபாசங்களாக மாற்றி மாணவர்களின் இச்சைகளைத் தூண்டுவதற்கும் அதன் வழி அவர்களை துர் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கும் இந்த இலத்திரனியல் சாதனங்கள் காட்டுகின்ற கரிசனைகள் எம்மை மனவேதனை அடையச் செய்கின்றன.

இன்று வட பகுதியில் அரங்கேற்றப்படுகின்ற வாள்வெட்டு கலாசாரம், கொலை, களவு, பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியவற்றிற்கு மூல காரணங்கள் இவ்வாறான நவீன சாதனங்களோ என்று எண்ண வேண்டியுள்ளது.

இந்தத் துர்ப்பழக்க வழக்கங்களை அரங்கேற்றுவது எமது இளைஞர் யுவதிகளே என எண்ணுகின்ற போது தவறு எங்கள் மீது அதாவது பெற்றோர்கள் மீதுதான் இருப்பதாகத் தெரிகின்றது. எமது கவனக் குறைவும் ஒரு முக்கிய காரணமாக அமையலாம்.

ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளைகளின் ஒழுக்கங்கள், கற்றல் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் கூர்ந்து அவதானிக்கப்படுகின்ற போது வீடு முன்னேறும் இவ்வாறு வீடுகள் முன்னேற நாடு முன்னேறும். எனவே தேவையற்ற உள்ளீடுகள் நுழைய முடியாத வாறு கட்டுக்கோப்புக்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

அவசர பணக்காரர்களாக மாற வேண்டும் என்பதற்காக கஞ்சா கடத்தல், கள்ளமண் ஏற்றிவிற்றல், அங்கீகாரமற்ற கள்வுத் தொழில்களை மேற்கொள்ளல் போன்றவற்றில் எமது இளைஞர்கள் ஈடுபடுகின்றார்கள்.

இவற்றைப் பெற்றாராகிய நாமே தடுக்க முற்பட வேண்டும். பிள்ளைகளுக்கு நாமே களவை கெட்ட பழக்க வழக்கங்களை வலிந்து பழக்குபவர்களாக அமையக் கூடாது என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார. (செ-9)

# யாழ்.குற்றச் செயல்களுடன்...

வியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதனை நாம் அவதானிக்க முடிகிறது.

இச் செயல்களை மேற்கொண்டு வரும் குழுக்கள் இங்குள்ள மக்களுக்கு பெரும் அசௌகரியமாகவும் பெரும் நெருக்கடியாகவும்இருக்கின்றன.

எனவே இக் குழுக்கள் தொடர்ச்சியாக இயங்கக்கூடாது. அவற்றை கட்டுப்படுத்துவதற்கும் முற்றாக இல்லாமல் செய்வதற்கும் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுக்கும் இராணுவத்துக்கும் தொடர்புகள் காணப்படுவதாக மக்கள் மத்தியில் பொதுவான அபிபபிராயம் காணப்படுகிறது.

அந்த அபிப்பிராயத்தை எவரும் உதாசீனம் செய்ய முடியாது. மக்கள் மத்தியில் நிலவிவரும் கருத்தை ஏற்று இது தொடர்பாக விசா ரணைகள்மேற்கொள்ளப்பட வேண்டுமென இரா.சம்பந்தன் தெரிவித்தார். (செ-9)

# வீதிக்கு இற...

முன்னைய ஆட்சியில் நடந்த ஊழல்களையும் இந்த ஆட்சியில் நடந்துள்ள ஊழல்களையும் தடுக்க மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து மக்கள் வீதிக்கு இறங்கி போராடவேண்டும்.

ஆட்சியை கவிழ்க்கமுடியாத போதிலும் சரியான பாதையில் செயற்பட அழுத்தம் கொடுக்க முடியும்எனமக்கள்விடுதலைமுன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக பல்வேறு விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வரும் நிலையில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை ஊடகங்கள் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ)

# காணி, பொலிஸ், நிதி...

அரசியலமைப்புச் சட்டவாக்க சபையின் உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரத்னவின் ஆலோசனைக்கு அமைய இந்த குழுக்கள் நியமிக்கப்பட்டன.

மத்திய அரசு, மாகாண சபை மற்றும் பிரதேச நிர்வாகங்கள் இடையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டிய விதம் குறித்து பரிந்துரைகளை செய்ய இந்த உப குழுக்கள் நியமிக்கப்பட்டன.

அதில் ஒரு உப குழுவினால் அரசியலமைப்பு பேரவையிடம் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்து தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி 13ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தி, காணிகளை முகாமைத்துவம் செய்யும் முழு அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்குவது.

மாகாண பொலிஸ் ஆணைக்குழுவை மத்திய அரசாங்கத்தில் இருந்து பிரிப்பது மற்றும் ஆணைக் குழுவிற்கான உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரங்களை முதலமைச்சருக்கு வழங்குவது.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள நிறுவன பட்டியலை நீக்கி விட்டு, மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள் இடையில் உரிய முறையில் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளல்.

மத்திய அரசாங்கத்திடம் உள்ள தேசிய கொள்கை வகுப்பு அதிகாரத்தை நீக்குதல்.

அரசியலமைப்பு நீதிமன்றத்தை ஸ்தாபித்தல். மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் ஏற்படும் அதிகாரம் சம்பந்தமான பிரச்சினையை தீர்க்கவும் தீர்ப்பு வழங்கவும் உயர்நீதிமன்றத்திற்கு இருக்கும் அதிகாரம் இதன் மூலம் இரத்துச் செய்யப்படும்.

அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கான உறுப்பினர் இனவாரி அடிப்படையில் நியமித்தல்.

மாகாண அரசுக்கு சுதந்திரமான நிதி அதிகாரம் மற்றும் வரி அறவீடு செய்யும் அதிகாரங்களை வழங்குதல்.மாகாண அரச சேவையின் நிர்வாகத்தை மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வருதல். மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருதல்.

மாகாண அரச சேவை ஆணைக குழு முதலமைச்சரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும்.

ஆளுநரை நியமிக்க முதலமைச்சரின் அனுமதியை பெற்றுக் கொள்ளல். மாகாண சபைகள் தவறாக அதிகாரத்தை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில், மாகாண சபையை கலைக்க ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரத்தை மட்டுப்படுத்தி, மாகாண சபையை கலைக்க அரசியலமைப்பு நீதிமன்றத்திடம் அனுமதியை பெற்றுக்கொளளுதல்.

பொது அரசியல் அதிகாரம் என்ற மக்களின் ஆதிபத்திய அதிகாரத்தை, மத்திய, மாகாண மற்றும் பிரதேச என்று மூன்றாக பிரிந்து செல்வதை ஏற்றுக்கொள்ளல்.

நாடாளுமன்றத்திற்கு இருக்கும் மாகாண துறைகளுக்கான சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம் மற்றுமகொள்கைகளை பரிந்துரைக்கும் அதிகாரம் என்பவற்றை இரத்துச் செய்தல் ஆகிய பரிந்துரைகளை இந்த உப குழு முன்வைத்துள்ளது. (செ)

# தேசிய அரசை கவிழ்ப்பதற்கு...

பந்தத்தை நடைமுறைப்படுத்துகின்றாரா? என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறக்காமம் மாயக்கல்லி மலையல் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளதுடன் மாத்திரமன்றி அதற்கு அருகிலுள்ள காணியையும் தேரர்கள் கோரியிருப்பதாக அறிகின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை சமூகத்தினரின் பூர்வீக இடங்கள் திட்டமிடப்பட்ட வகையில் ஆக்கிரமிக்கப்பட்டன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பும்போது புதிய குடியேற்றங்களையும்இராணுவமுகாம்களையுமே அவர்களால் காண முடிந்தது.

இந்த நிலைமையை மாற்றியமைக்கவே சிறுபான்மை மக்கள் பாரிய எதிர்பார்ப்புக்களுடன் நல்லாட்சி அரசுக்கு வாக்களித்தனர்.

ஆனால் இன்று ஜனாதிபதியும் பிரதமரும் விரும்பாத பல விடயங்கள் திட்டமிடப்பட்ட வகையில் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

மாயக்கல்லி மலையில் சிலை வைக்கப்பட்டுள்ளமைக்கு பின்னால நல்லாட்சியின் முக்கிய அமைச்சரொருவர் இருப்பதாக கூறப்படுகின்றது.

அவ்வாறாயின் அந்த அமைச்சர் தேசிய அரசாங்கத்தை கவிழ்க்க முயலும்சக்திகளுக்கு துணை போகினறாரா என்ற சந்தேகம் எழுகின்றது.

சிறுபான்மை சமூகத்தின் மத்தியில் நல்லாட்சியின் பெயரை மங்கி மறையச் செய்வதற்கான பல விடயங்கள் திரைமறைவில் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு ஒப்பந்தத்தை இந்த அமைச்சர் பொறுப்பேற்று கிழக்கில் முன்னெடுக்கின்றாரா என்ற சந்தேகம் நல்லாட்சிக்கு வாக்களித்த சிறுபான்மை மக்கள் மனங்களில் எழுந்துள்ளது.

இப்பொழுது இறக்காமத்தில் வைக்கப்படும் சிலை எதிர்காலத்தில் சிறுபான்மையினரின் மதஸ்தலங்களுக்குள் வைக்கப்பட்டாலும ஆச்சரியப்படுவதற்கில்லை.

கிழக்கில் தமிழ், முஸ்லிம் மற்றும சிங்கள மக்கள் ஒற்றுமையாகவும் ஐக்கியத்துடனும் வாழ்ந்து வருகின்றனர்.

அதனை விரும்பாத சிலர் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக எண்ணத் தோன்றுகின்றது.

இந்த சம்பவத்தினால் இறக்காமம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது

எனவே இது தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் அதிகாரிகள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு அவர்கள் நடந்து கொள்ள தவறுமிடத்து இந்த விடயத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்துகது கொண்டு செல்வேன் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என கிழக்கு முதலமைச்சர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ)

# ஜனாதிபதி, பிரதமரை சந்தித்து...

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டத்தினை நடத்தவுள்ளதுடன், இப்பிரச்சினையைத்தொடர்ந்து வடக்கில் அதாவது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை குறிதது ஜனாதிபதி, பிரதமரிடம் வலியுறுத்துவது போன்ற கோரிக்கைகளை ஏழு தமிழ்க் கட்சிகள் கூட்டாக தீர்மானித்துள்ளன.

வல்லை வெளியில் உள்ள யாழ் பீச் ஹோட்டலில், தமிழ் அரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலை கூட்டணி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலை இயக்கம் என்ற ஏழு கட்சிகளும் ஹோட்டிலில் நேற்று காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மண வரை கூடி ஆராய்ந்து தமது தீர்மானங்களை எடுத்திருந்தன.

இத் தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு ரெலோ கட்சியைச் சேர்ந்த சிறிகாந்தா கருத்துத் தெரிவிக்கையில்,

இரண்டு பல்கலைக்கழக மாணவர்களுடைய படுகொலை தொடர்பிலே பாரபட்சம் அற்றதும் பூரணமானதுமான புலன் விசாரணையினை எவ்வித தலையீடுகளும் அற்ற நீதி விசாரணைகளையும் நாங்கள் கோருகிறோம்.

மேலும் இப்படுகொலைகளின் பின்னணியும் காரணிகளும் விசாரணையூடாக கண்டறியப்பட வேண்டும் என மேலும் கோருகிறோம்.

இவ்விதம் முழு உண்மையும் கண்டறியப்பட்டால் மாத்திரமே எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதை தடுக்க முடியும் என நாங்கள் தெரிவித்து நிற்கிறோம்.

இப்படுகொலைகளைத்தொடர்ந்து வாள்வெட்டுக் குழுக்கள் எனக் கூறப்படுகிற குழுக்களை சம்பந்தப்படுத்தி வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் மற்றும் நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்கள் காரணமாக வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் மத்தியில் ஓர் அச்ச சூழ்நிலை ஏற்பட்டிருப்பதையும் அதனை மேலும் தீவரப்படுத்தும் விதத்தில் சில தரப்பினரினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை சுட்டிக்காட்டியும் இவ் நடவடிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்படுவதையும் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக் கோரி ஓர் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள். இது எங்கு எப்போது நடத்தப்படும் என பின்னர் அறிவிக்கப்படும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமை தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியினையும், பிரதமரினையும் கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட குழு சந்தித்து வலியுறுத்த வேண்டும் என்றும் தீர்மாணிக்கப்பட்டுள்ளது என சிறிகாந்த தகவல் தெரிவித்திருந்தார். (செ-60)

# முன்னாள்...

கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் முறையிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரிடம் முறையிடப்பட்டமை குறித்து அவர் கருத்துத் தெரிவித்தபோது, நடராசா சபேஸ்வரன் என்ற 31 வயதான தனது கணவன் இந்தியாவுக்கு திருமண நிகழ்வொன்றிற்கு சென்றிருந்தபோது, அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் கடந்த மாதம் 23ஆம் திகதி பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்த தனது கணவன், கடந்த 2010ஆம் ஆண்டு நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டதாக தெரிவித்த குறித்த பெண், குற்றங்களை ஒப்புக் கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறு கைது செய்யப்பட்டமையானது குடும்பத்தினரை மிகவும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளதாக குறிப்பிட்டார்.

வெலிக்கடை சிறைச்சாலையில தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவனை பார்ப்பதற்காக சென்றிருந்த போதும், எதற்காக கைது செய்யப்பட்டார், என்ன நடந்தது என்ற விடயங்களை தம்மிடம் தெரிவிக்க முடியாத நிலையில் தனது கணவன் இருந்ததாகவும் குறித்த பெண் கவலையுடன் எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்துள்ளார். (செ-15)

## ஜனாதிபதி நேற்று...

நடத்தவுள்ளார்.

நொய்டாவில் உள்ள இந்திய எக்ஸ்போ நிலையத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று நடைபெறுகின்ற இந்த மாநாட்டை உலக சுகாதார நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதியாக பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன, 22 மாதங்களில், டில்லிக்கு மேற்கொள்ளும் நான்காவது பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## இரு நாட்களுக்குள்...

இளைஞர்கள், நேற்று முன்தினம் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் தமது முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

சிவில் உடையில் வந்தவர்களால் மேற்குறித்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கைது செய்தமைக்கான காரணங்கள் எவையும் இதுவரை தமக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் அண்மையில் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தமை போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் குறித்த கைதுகள் இடம்பெற்றிருக்கலாம் என தெரியவருகிறது. (செ-9,4)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**

## வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல்

வட மாகாணத்தில் கடமையாற்றும் கடமை நிறைவேற்றும் அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று அகில இலங்கை கடமை நிறைவேற்று அதிபர் சங்க பிரதிநிதிகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் அனைத்து கடமை நிறைவேற்றும் அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்:-ஜடியல் அக்கடமி
கே.கே.எஸ்.வீதி (யா/இந்துக் கல்லூரி அருகாமை)

காலம்:-08.11.2016 செவ்வாய்

நேரம்:-காலை 8.30மணி

(இ)

**-கடமை நிறைவேற்றும் அதிபர் சங்கம்**

## BA, B.Com, BBA (Medium-Tamil)

**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (ஒலுவில்)**

- மேற்படி கற்கைநெறிகளுக்குரிய பதிவுகளும் விரிவுரைகளும் நடைபெறுகின்றன.
- A/L இல் 2015-ம் ஆண்டு, இதற்கு முன்னர் பரீட்சை எடுத்து 3 பாடம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
- 14.11.2016 வரை பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

விபரங்களுக்கு:-S.அருள் நங்கை (நிர்வாகி)

T.P No:021 222 8148, 0778469721

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-6337)

## அன்பொளி கல்வியகம்

**யாழ்.இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை-2016**

**சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் (12.11.2016) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் (நாச்சிமார் கோவிலடி) நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**-இயக்குநர்**

(சி-6336)

## அவதானமாக இருங்கள்

**மிக குறைந்த கட்டணத்திலான வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

✔ பொதிகள் சேவை தொடர்பான சர்வதேச சட்டம் மற்றும் ஒழுங்கை மீறும் வகையில் குறைந்த கட்டணத்தில் அனுப்பப்படும் பொதிகள் பாதுகாப்பாக உரிய நேரத்தில் சென்றடைவது சாத்தியமற்றதே.

நியாயமான கட்டணத்தில் நிறைவான பொதிகள் சேவையை 20 வருட காலமாக வழங்கி வரும் நாம்

மிகச் சரியான தெரிவு அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் Tel : 021 222 3536
இல.10, கஸ்தூரியார் வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

(C-6334)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.